

# ரமணோதயம்

ஜூலை 2025

காலாண்டு

அருணை விஜய இதழ்

விலை ₹ 20




| தேதி | | | நிகழ்ச்சி நிரல் | |
|---|---|---|---|---|
| தமிழ் | ஆங்கிலம் | கிழமை | காலை | மாலை |
| விசுவாவசு<br>ஆவணி 2 | 18-8-2025 | திங்கள் | காலை 7 மணி அனுக்ஞை<br>ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை,<br>சங்கல்பம், ஆசார்ய ரித்விக் வர்ணம்,<br>மதுபர்கம், கணபதி ஹோமம், நவக்கிரக<br>ஹோமம், வாஸ்து ஸ்ரீ சுக்த ஹோமம்<br>10.30 பூர்ணாஹூதி, 11.00<br>மந்த்ர புஷ்பம், மஹா தீபாராதனை | 4.30 ம்ருத்சங்க்ரஹணம், ரக்ஷா<br>பந்தனம், கலாகர்ஷணம்<br>யாகசாலைப் பிரவேசம்,<br>வாஸ்து ஹோமம், கலாகர்ஷணம்<br>முதல் கால ஜபம், ஹோமம், ருத்ர<br>த்ரிசதி, 7.30 பூர்ணாஹூதி,<br>8.00 மஹா தீபாராதனை |
| ஆவணி 3 | 19-8-2025 | செவ்வாய் | 7.00 மணி இரண்டாவது கால<br>யாகசாலை பூஜை, ஜபம், ஹோமம்,<br>கன்யா, சுவாஸினி பூஜை<br>8.30 மும்மூர்த்தி அஷ்டபந்தனம்<br>சாற்றுதல் 10.30 பூர்ணாஹூதி,<br>11.00 மந்த்ர புஷ்பம், மஹா தீபாராதனை | 4.30 மணி மூன்றாவது கால<br>யாகசாலை பூஜை, ஜபம், ஹோமம்,<br>பிம்பசுத்தி புண்யாஹவாசனம்,<br>கௌதுக பந்தனம், ஸ்ரீ ரமண<br>சஹஸ்ரநாம, லலிதா ஸஹஸ்ரநாம<br>அர்ச்சனை, 7.30 பூர்ணாஹூதி,<br>8.00 மஹா தீபாராதனை |
| ஆவணி 4 | 20-8-2025 | புதன் | 6.00 மணி நாலாவது கால யாகசாலை<br>பூஜை, ஜபம், ஹோமம்,<br>9.00 பூர்ணாஹூதி, 9.30 மணி மஹா<br>தீபாராதனை, 10.00 யாத்ரா தானம்,<br>10.15 மணி மஹா கும்பாபிஷேகம்<br>10.30 மூலமூர்த்திகளுக்கு மஹா<br>அபிஷேகம், 11.00 மஹா தீபாராதனை | ஸ்ரீ ரமணாச்ரமம்<br>திருவண்ணாமலை |

உதயம் 24 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2025

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

*அருணை விஜய இதழ், ஜூலை 2025*


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ரமணக்கண் | | 14 |
| 3 | தட்சிணாமூர்த்தி தோத்திரம் | சிதம்பர குற்றாலம் | 15 |
| 3 | இனிவரும் திருநாட்கள் | | 19 |
| 4 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 21 |
| 5 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 31 |
| 6 | திருச்சுழி | | 37 |
| 7 | ரமண புராணம் | ஆகுரா | 45 |
| 8 | டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு | மா. முருகேசன் | 57 |
| 9 | ஆதிசங்கரரின் பக்தி வேதாந்தம் | டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன் | 65 |
| 10 | ஸ்ரீ ரமணாஸ்ரமம் மஹா கும்பாபிஷேகம் 2025 | | 75 |
| 11 | செய்திகள் | | 77 |

# ஆசிரியர் உரை

## ஞானப் பெருவழி

அருணாசலம் என்பது என்ன? "அருணாசலம் என்பது உயிர்கள் அனைத்திலும் ஒளிரும் 'நான்' என்னும் பரமான்மாவே" என்று பகவான் கூறுகிறார்.

அதுவே காலதேசம், நாம ரூபம் அனைத்தையும் கடந்த பரம்பொருள். அருணாசல பஞ்சகத்தில் உள்ள பல பாடல்கள் இந்தப் பேருண்மையை மறை பொருளாக விளக்குகின்றன.

அதே சமயம் சில சாதகர்களுக்கு, அருணாசலம் என்பதே ஆத்மா எனில், பௌதிக ரூபமான இந்த மலைக்கு ஏன் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற ஐயம் எழலாம். இதே சந்தேகம், பகவானின் பக்தரான டாக்டர் சையத் அவர்களுக்கும் எழுந்ததைக் குறித்து பகவான் வசனாம்ருதம் 272 வெளிப்படுத்துகிறது.

டாக்டர் சையத், "பகவான் அருளிய அருணாசல ஸ்துதி பஞ்சகத்தைப் படித்துக் கொண்டு இருக்கிறேன். அத்வைதியான தாங்கள் எப்படி பரமாத்மாவை பௌதிக ரூபமாக காணும் இந்த ஸ்லோகத்தை இயற்றியுள்ளீர்" என வினவுகிறார்:

ப: பக்தனும் பகவானும் ஸ்தோத்திரமும் யாவும் ஒரே ஸ்வரூபமேயாகும்.

கே: ஆனால், அத்துதிகளில் அருணமலையையே கடவுளாகப் போற்றிப் பணிந்து பிரார்த்தித்திருக்கிறீர்கள்.

ப: ஆத்மாவை உடலோடு நீங்கள் சம்பந்தப்படுத்திக் கொள்ளலாம்; பக்தன் அவ்வாத்மாவை அருணா சலத்துடன் சம்பந்தப்படுத்திக் கொள்ளக் கூடாதா?

கே: பரமாத்ம ஸ்வரூபமாகக் கொள்வதெனின், எத்தனையோ மலைகளிருக்க, ஸர்வ வியாபியாம் அவரை இந்த மலையோடு ஒரு தனிச்சிறப்புடன் சம்பந்தப்படுத்துவதேன்?

ப: அலஹாபாதிலிருந்து உங்களை இவ்விடத்திற்கு ஆகர்ஷித்தது எது? இங்கே கூடியிருப்போர் யாவரையும் இவ்விடத்திற்கு ஆகர்ஷித்தது எது?

கே: பகவானே (அதாவது தாங்களே).

ப: என்னை இவ்விடத்திற்கு ஆகர்ஷித்தது எது? அருணாசலமே யல்லவா? அந்த சக்தியை யாரும் மறுக்க முடியாது. உள்ளும் வெளியும் எங்கும் நிறைந்துள்ள ஆத்மஸ்வரூபமே அருணாசலம்.

இதே கருத்தை மிகத் தெளிவாக ஸ்ரீ அருணாசல அஷ்டகம் 3ஆவது பாடலில் அருணாசலனை நேரடியாக அழைத்து,

"நின்னையா னுருவென வெண்ணியே நண்ண
நிலமிசை மலையெனு நிலையினை நீதான்..."

என்று பாடுகிறார். நாம் இந்தத் தேகத்தையே 'நான்' என்று பாவிக்கும் வரை இம்மலை உருவும் இறைவனே என்பதும் உண்மையே. இம்மலையே இறைவன். அனைவரையும் இங்கே ஈர்க்கிறது என்பதே அது ஒரு வெறும் பௌதிக நிலை அல்ல.

"விண்டிடா துன்னிலை விளக்கிட வென்றே
விண்டல மசலமா விளங்கிட நின்றாய்."

என்கிறார்.

பகவான் இறைவனையே அருணகிரி வடிவமாய் தனது நேரடி சத்குருவாகவும் ஏற்றுக் கொண்டிருப்பவர்

*என்பதை அவரது பாடல் வரிகளே மறை பொருளாய் விளக்குகின்றன.*

*"தெய்வமென் றுன்னைச் சாரவே யென்னைச்*
*சேர வொழித்தா யருணாசலா"*

*என்று அக்ஷரமணமாலையில் கூறுகிறார்.*

*அத்வைத ஸ்வரூபமாகவே அருணாசலத்தை அறிந்தவர் பகவான் எனினும் சகுண உபாசனையால் ஏற்படும் பெருவினையை பகவான் அருணாசல பதிகத்தின் 10 ஆவது பாடலில் அழகுறத் தெளிவு மிளிர எடுத்து உரைக்கின்றார்.*

*"பார்த்தனன் புதுமை யுயிர்வலி காந்த*
*பருவத மொருதர மிதனை*
*யோர்த்திடு முயிரின் சேட்டையை யொடுக்கி*
*யொருதன தபிமுக மாக*
*வீர்த்ததைத் தன்போ லசலமாச் செய்தவ்*
*வின்னுயிர் பலிகொளு மிஃதென்*
*னோர்த்துய்மி னுயிர்கா ளுளமதி லொளிரிவ்*
*வுயிர்க்கொலி யருணமா கிரியே."*

*இந்த ஆழ்பொருள் செறிந்த பாடலின் விளக்கமாவது, இந்த அருணாசலம் வெறும் பௌதிக வடிவம் அல்ல. இரும்பைக் காந்தம் கவர்வதுபோல, இது உயிர்களை கவர்ந்து இழுக்கிறது. எந்த உயிரேனும் தன்னை ஒரே ஒருமுறை நினைத்தாலும் அப்போது அந்த உயிரின் வழக்கமான செயல்களை வெளிப்புறம் செல்வதைத் தடுத்து, அந்த ஆத்மாவைத் தன்னை நோக்கி இழுத்து, தன் வயம் ஆக்குகிறது. அசலம் சற்றும் அசைவோ, அதிர்வோ இல்லாதது என்ற தன் நிலையை ஒத்து அடியாரைச் சலனமற்ற பேரமைதியில் இருக்கச் செய்யும். தன்னில் அந்த உயிரை இரண்டறக் கரைத்து அத்வைத அநுபவத்தில் ஆழ்த்துகிறது. இதுவே அருணாசலத்தின் ஆச்சர்யம் ஊட்டும் பெரும் சக்தி. எனவே உயிர்கள் அனைத்தும் அருணாசலத்தை ஆழ்மனதில் நினைப்பதன்*

மூலம் ஜீவபோதம் அழிந்து ஆன்ம போதம் திளைக்க வருவீராக! என்று அழைக்கிறார்.

பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சரின் அன்பர் ஒருவர் வினவினார்:

"குரு மகராஜ்! எனக்கு பலநாள் சந்தேகம். எப்படி கடவுள் பல்வேறு வடிவம் கொண்டு பக்தர்கள் தொழும் மூர்த்தங்கள் ஆகவும் அதே சமயம் உருவமற்ற பரம்பொருளாகவும் இருக்க முடியும்? ஒன்றுதானே சாத்தியம்?"

பரமஹம்சர் சிரித்து கொண்டே "ஏன் முடியாது? ஒரே வஸ்துவான தண்ணீர் அதன் உள்ளுறை வெப்பம் மிகக் குறையும் போது திடப் பொருளாக பனிக்கட்டி நிலையை அடைகிறது. மீண்டும் உள்ளுறை வெப்பம் சற்று உயரும்போது திரவ நிலையை அடைந்து தண்ணீராய் ஓடுகிறது. வெப்பநிலை மிகவும் அதிகரித்தால் அது நீராவியாய் மாறுகிறது. மீண்டும் வெப்ப நிலையை குறைக்கக் குறைக்க தண்ணீராகவும் பனிக்கட்டியாகவும் மாறுகிறது. எப்படி இருந்தாலும் அதன் அடிப்படைத் தன்மையில் மாற்றம் ஏதுமில்லை. ஒரே மூலக்கூற்றினை கொண்டுள்ளது. இறைவனும் அப்படித்தான். நீ எவ்வுருவில் பார்த்தாலும் எப்பேரிட்டு அழைத்தாலும் இருப்பது ஒன்றே. இவ்வாறே, திடம், திரவம் மற்றும் ஆவி என்று வெவ்வேறு உஷ்ணநிலை. ஒரே தண்ணீர், திடமான தண்ணீர் மற்றும் ஆவியான நீராவி போன்ற மூன்று நிலைகளிலும் ஒரே நீர் தோன்றுவதுபோல் ஒரு சாதகனின் உள்ளீட்டு பக்திநிலை குளிரக்குளிர அவன், அருவம், அருஉருவம் மற்றும் உருவம் போன்ற மூன்று வெவ்வேறு நிலைகளிலும் ஒரே பரம்பொருள் தோன்றுகிறது" என்று அழகுற விளக்கினார்.

அப்போதும் அடியார்க்கு முழுத் திருப்தி ஏற்படவில்லை. "உள்ளீட்டு வெப்பநிலை கீழே இறங்க இறங்க அதே பரம்பொருள் அருவம், அருஉருவம்

*மற்றும் உருவம் என்ற மூன்று வெவ்வேறு நிலைகளில் தோன்றுகிறது” என்று கூறினீர்கள். அப்படியானால் நிரந்தரமான வடிவில் நீங்கள் துர்கை, திருமால், நடராஜ சிவம், முருகன் போன்ற பல்வேறு ரூபங்களில் நிலைத்து இருப்பதாக எண்ணி வழிபடுகிறார்களே! அது எப்படி சாத்தியம்?” என்று மீண்டும் வினவினார்.*

*இதற்கு பரமஹம்சர் அளிக்கும் விடையில் அவரது உயரிய ஆன்மிகத் தெளிவு வெளிப்படுகிறது. நான் விஞ்ஞானம் படித்ததில்லை. ஆனால் கற்றறிந்தோர் சொல்கிறார்கள். துருவப் பிரதேசம் போன்ற வெப்பநிலை மிகுந்த தாழ்வாய் இருக்கும் இடத்தில், நீர் உருகி ஓடாமல், நிரந்தரமான பனிக்கட்டி ரூபத்திலேயே இருக்கிறது. அதுபோன்றே, மிக உயர்ந்த பக்தர்களும் ஞானிகளும் தமது இதயத்தில் எண்ண அலை ஏதும் ஏற்படாது மிகக் குறைந்த (ஜீரோ டிகிரிக்கும் கீழானதுபோல) தியானத்தில் இருக்கும்போது அவர்கள் எந்த இஷ்ட தெய்வத்தைத் தியானிக்கின்றார்களோ, அதே உருவத்தில் இறைவன் சிவனோ, திருமாலோ, அம்பிகை ஆகியோர் உருவம் தாங்கித் தோற்றம் அளிக்கிறான்.*

*பரமஹம்சர், இது இறைவன் உருவமா, அருவமா, உருவம்அருவம் இரண்டும் ஆனதா என்பதற்குத் தெளிவான பொருத்தமான விடை அளிக்கின்றாரல்லவா? பார்க்கப்போனால் பெரிய புராணத்தில் இறை விளக்கம் பாடலிலேயே சேக்கிழார் இதனை விவரிக்கிறார்.*

*“உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்*
*நிலவு லாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்*
*மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.”*

*சிவபிரானை பக்த கோடிகள் அனைவரும் வாழ்த்தி வணங்கினாலும் அவர்களால் தம் இதயத்தில் உணர்ந்து அறிவதற்கு அரிதானவன். அதற்கு ஜபம்,*

*தியானம் போன்ற பல படிகள் தேவைப்படும். எனவே இறைவனை உருவற்ற நிலையில் அறிய முற்படுவது அரிதான கடினமாக முயற்சி 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அறியவன்' அடுத்தது, சிவன் என்பவன் ஜடாமுடியுடன் கங்கையையும் நிலவினையும் தலையில் தாங்கி நடனமாடும் உருவமா? அப்பரம் பொருள், எல்லையற்ற ஒன்று, எங்ஙனம் தன்னை எல்லைக்கு உட்படுத்திக் கொண்டு முழுஉருவத்தில் அகங்காரமாகத் தோன்ற முடியும்? இது நகைப்புக்கு உரியதான ஒன்றாக அமையுமே? அதனால் அவன் உருவற்ற நிலையிலோ அல்லது அகங்காரமான உருவத்திலேயோ தோன்ற முடியும் என்பதும் பொருத்தமாக இல்லையே!*

*வேறாக யோசிப்போமா! அவன், உருவம் அருவம் இரண்டு நிலையையும் திரித்து செய்யும் நிலையில் வருவானா? எது உருவம், அருவம் என்ற இரண்டு நிலைகளில் இருக்க முடியும் என்றால் அது ஒளிரும் ஜோதிதான். ஜோதிக்கு என்று ஒரு தனி உருவம் இல்லை. அது சமயத்திற்கும் இடத்திற்கும் ஏற்பத் தோற்றம் எடுக்கிறது. அதற்கு ஒரு தனிப்பட்ட ஜுவாலை என்ற தோற்றம் இன்றி இடத்திற்கு ஏற்ப உருவஅருவம் எடுக்கிறது அல்லவா? அந்த அலகில்லாத அளவீடு இல்லாத ஜோதி உருவிலும் ரூபாரூபாமாக சிவபிரான் ஒளிர்கிறான்.*

*அது சரி! இங்ஙனம் நீங்கள் பல நிலைகளில் போற்றும் சிவபிரான் எங்கே நடனம் பயின்று கொண்டு இருக்கிறான்? அவன் இருக்கும் இடம் எனது இதயக் குகையே! அங்கே அவன், 'நான் நான்', என்று இடைவிடாது அதிர்ந்து கொண்டு இருக்கிறான். மனத்தை வெளியே விடாமல் உள்நோக்கி, இதயத்தை நோக்கித் திருப்பு. அதிலேயே ஆழ்ந்து செல்வாய். அதுவே ஆத்ம நிஷ்டமாக உறுதியான வழி என்று பகவான் விளக்குகிறார்.*

*“இதயமாங் குகையி னாப்ப ணேகமாம் பிரம்ம மாத்ர
மதுவக மகமா நேரே யவிர்ந்திடு மான்மா வாக
விதயமே சார்வாய் தன்னை யெண்ணியா ழலது வாயு
வதனுட னாழ்ம னத்தா லான்மாவி னிட்ட னாவாய்.”*

பகவான் காட்டும் நேர்வழி, எளிய வழி என்பது நம்மைச் சுற்றி இறைவன் படைத்துள்ள இவ்வுலகம் இருவகைப்படும். அர்த்தப் பிரபஞ்சம் எனப்படும் பொருட்களால் ஆன உலகம். சப்தப் பிரபஞ்சம் எனப்படும் ஒலியாலும் சொற்களாலும் உள்ள உலகம். எண்ணத்தால் உருவாக்கிய உலகமாகிய இரண்டும் அருணாசலம் என்னும் தியானத்தால் அழிந்துபடும் என்பதை மணிவாசகர் திருவெம்பாவையில் விளக்குகிறார்.

“பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே”

என்னும் சொற்றொடர் இதனை விளக்குகிறது.

ஈரேழு உலகமாய் சொற்களால் உருவாக்கப்பட்ட இந்த சப்தப் பிரபஞ்சம் எங்கும் பரவியுள்ள பொருட்களால் அர்த்தப் பிரபஞ்சமும் அருணாசலத்தின் தியானிக்க அழிந்து ஒன்றுகின்றன என்று மணிவாசகர் கூறுகிறார். அதுவே ‘தத்வமஸி’ ‘நீயே அதுவாக இருக்கிறாய்’ என வேத மஹா வாக்கியத்தின் பொருள்.

பகவான் இதனை அருணாசல நவமணி மாலை இரண்டாம் பாடலில் தெளிவுற விளக்குகிறார்.

*“சத்திய சிற்சுக மன்றிப் பரவுயிர் சாரயிக்க
மர்த்தவத் தத்வ மசியரு ணப்பொரு ளாமசலத்
தர்த்தங் கனமது வாகுஞ்செவ் வாடக வாரொளியா
முத்தி நினைக்க வருளரு ணாசல முன்னிடவே.”*

பொருள்: செம்பொன் போல ஒளிவீசும் ஜோதி ஸ்வரூபமேயானதும், நினைத்த மாத்திரத்தில் முக்தியை அளிக்கக் கூடியதுமான ‘அருணாசலா’ என்கிற பதத்தின் ‘அருண’ என்பதின் பொருள் சத்சித்ஆனந்தம் ஜீவ

*ப்ரம்ம ஐக்யம், 'அதுவே நீயாக இருக்கிறாய் (தத்வமஸி)' என்பதாகும்.*

*அருணாசலம் பகவான் பக்தர்கள் அனைத்துமே ஆற்றல் மிக்க சத்சங்கம். டாக்டர் டி.என். கிருஷ்ணசுவாமியிடம் பகவான் கூறுகிறார். இந்த மலை முழுவதுமே தெய்வீகம் ஆனது. இதுவே சிவன். நாம் இந்த உடலை எப்படி 'நான்' என்று அபிமானிக்கிறோமோ, அங்ஙனம் இம்மலையை சிவன் 'நான்' என்று அபிமானிக்கிறார்.*

*இங்ஙனம் அருணாசலத்தின் ஈர்ப்பு சக்தியினால் ஜீவன் அதில் ஒடுங்கும்போது, ஜீவபோதம் அழிந்து பிரம்மாத்மாகவே அவன் ஆகிறான்.*

*இந்தப் பெரும் ஆன்மிக ரசவாதத்தையே தாயுமானவர்*

*"சித்த மௌனம் மனோ வாக்கெலாம் மௌனம்*
*சுத்த மௌனத்தில் தோன்றும் பராபரமே"*

*என்ற அழகுற விவரிக்கின்றார்.*

*நம்மை நாமரூபமாக உணர்கின்ற வரையில் இறைவனையும் நாமரூபத்துடன் தொடர்புபடுத்திதான் கருத முடியும். இதனை பகவான்*

*"உன்னுரு வருவென வுன்னிடின் விண்ணோக்கு*
*உறவுலகு அலைதரும் ஒருவனை யொக்கும்"*

*என்ற உவமையில் விளக்குகிறார்.*

*மனித மனத்திற்கு இறைவனின் ரூபம் அவசியமான ஒரு நங்கூரமாய் இருக்கிறது. அருணாசலத்தையே இறை உருவாக மதித்துப் போற்றினால் நமது அகந்தை நிச்சயம் அறுபடும் என்கிறார் பகவான்.*

*ஞானமே உருவானதான இந்த அருணாசலம் தன்னைத் தேடிவரும் அடியாரின்மேல் பெரும் கருணையினால்தான் ஊனக் கண்கட்குப் புலப்படும்*

*வகையில் இவ்வருணமலையாய் சிவபிரான் வெளிப்பட்டுள்ளார். அடியார்கள் இம்மலையின் அருகாமையில் வசிப்பதனாலேயே ஆறுதலும் ஞானவழி விளக்கமும் பெருவர்.*

*குரு என்பவர் மனித வடிவில் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று பகவான் விளக்கி உள்ளார். வழக்கத்திற்கு மாறாக அபூர்வமாக விளக்கமும் தருகிறார் இதனை இங்குக் காண்போம்:*

*திலீப்: குரு தேவையில்லை என்று பகவான் கூறுவதாகச் சிலர் அபிப்ராயபடுகிறார்கள். வேறு பலர் எதிர்மாறாகக் கூறுகிறார்கள். பகவானின் சித்தம் யாதோ?*

*பகவான்: குரு அவசியமில்லை என்று நான் எப்போதும் சொன்னதில்லை.*

*திலீப்: தங்களுக்கு குரு யாரும் இருந்ததில்லை என்று ஸ்ரீ அரவிந்தர் அடிக்கடி கூறியுள்ளார்.*

*பகவான்: குரு யார் என்பதைப் பொறுத்தது இது. குரு என்பவர் மனித உருவில்தான் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. தத்தாத்ரேயருக்கு இருபத்து நான்கு குருமார்கள். இயற்கைத் தத்துவங்கள் முதலியன உள்பட பல அவரது ஞானசிரியர்களாக அமைந்து இருப்தைக் காண்கிறோம். அதன் உட்பொருள உலகில் காணப்பெறும் எந்த உருவமாயினும் அவரது குருவாக அமைந்தது என்பதே.*

*குரு கட்டாயம் வேண்டும். மன விகாரங்கள் ஆகிய இருள் வனாந்திரத்தில் மனிதன் விடுதலை பெற குரு ஒருவரால் மட்டும் சாத்தியமாகும் என்று உபநிடதங்கள் உணர்த்துகின்றன. ஆகவே குரு இருக்கத்தான் வேண்டும்.*

*திலீப்: நான் சொல்வது மனித வடிவில் குருவைப் பற்றி. மகரிஷியாம் தங்களுக்கு அவ்வாறு குரு இருந்ததில்லையே?*

பகவான்: ஏன்? எப்பொழுதாவது ஒருசமயம் எனக்கும் குரு இருந்து இருக்கலாம். அருணாசலத்தைத் துதித்து பாடல்கள் பாடியிருக்கிறேன். குரு என்றால் என்ன? ஈஸ்வரன் அல்லது ஆத்மாவே. மனிதன் தன் விருப்பங்களை நிறைவேற்ற கடவுளை வேண்டுகிறான். அப்புறம் ஒரு நிலை எழுகிறது. ஆசை நிறைவிற்கான வழிபாடு நின்றுபோய் ஆண்டவனை அடையவே தியானிக்கிறான். அப்போது கடவுள், அவன்முன் ஏதோ ஒரு வடிவில் காட்சி அளிக்கிறார். மனித உருவத்திலோ அல்லது வேறு வடிவமாகவோ தோன்றி அவன் பிரார்த்தனைக்கிணங்க தாமே குருவாக வழிகாட்கிறார்.

ஆர்தர் ஆஸ்போர்ன் இதைப்பற்றிக் கூறுகிறார், குரு என்பவர் மனித வடிவில் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று பகவான் விளக்குகிறார். வழக்கத்துக்கு மாறாக அபூர்வமாகக் கூறிய விளக்கம் இது.

வேங்கடராமன் எனும் அன்பருக்கு பகவான் காட்டிய வழி இது. இரண்டு காரியங்கள் நடைபெற வேண்டும். முதலில் உன்னை விடுத்து வேறு ஒருவரை குருவாக ஏற்க வேண்டும். அதன்பின் உன்னுள் ஒளிரும் குருவைத் தேட வேண்டும்.

பகவான் காட்டும் மிகச் சிறந்த நேரான வழி யாது? பெரும்பாலும் கடவுளை தனக்கு அன்னியமான பொருளாகப் பாவித்து, வணங்கி, தியானித்து வருகின்றனர். அவ்வாறின்றி அவனது நாட்டத்தைத் ‘தான்’ ஆகிய ஆத்மாவை நோக்கித் திருப்புவதே ரமணர் காட்டும் வழி.

“அனியபா வத்தி னவனக மாகு
மனனிய பாவமே யுந்தீபற
வனைத்தினு முத்தம முந்தீபற.” (உந்தீபற பாடல் 8)

தியானிக்கப்படும் இறைவன் தனக்கு அந்நியன் ஆனவன் என்று மனதில் நினைத்து, அவனைத் தனக்கு

*வேறாக பாவிப்பதைவிட தன்னுள் ஒளிரும் மெய்ப் பொருளே அவன். அவனே நான் என்று பாவிக்கும் அன்னிய பாவமே மிக உயர்ந்த நிலை. அஹம் பிரம்மாஸ்மி என்னும் அனனியமான ஜீவ ஈஸ்வர பேதமற்ற, தானே சிவமாகத் தழைக்கும் நிலையே அனைத்திலும் சிறந்த நிலை. மற்ற எண்ணத்தின் கலப்பு ஏதும் இல்லாமல் 'நான் இருக்கிறேன்' என்னும் தன் இருப்பையே பற்றி நிற்பதே அனனியபாவம். இதுவே சிரேஷ்டமான வழி என பகவான் கூறுகிறார்.*

*திடமிது பூஜை, ஜபம், தியானம் போன்றவற்றை இதுவரை அந்நியப் பொருளாய் தியானிக்கப்பட்ட இறைவன் தன்னால் இதுவரை கவனிக்கப்படாத 'நான்' என்னும் தன்மை உணர்வே என்று உபதேசிக்கிறார். அதனை விடாமல் பின்பற்றுவதே நேர்வழி அவன், அது என்னும் படர்க்கை உணர்வுகளுக்கு இடம் தராது, 'நான்' எனும் தன்மை உணர்விலேயே முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும் என்கிறார் பகவான்.*

*பகவான் கூறுகிறார், தனக்கு அந்நியமானவற்றை அறியக் கிளம்பாது, 'இருக்கிறேன்' 'அஸ்மி' என்ற இயல்பு வடிவ மாத்திரமாய் நிற்கும் அறிவே இதயம் எனப்படும். பிறவற்றை அறிகின்ற தொழில் அற்று நிற்கும். இவ் இயல் அறிவிற்குத்தான் உண்மை (ஆன்ம சத்தியம்) தானாகவே விளங்குமாதலால் அவ்வறிவாம் இதயத்தை (தன்னை) நாடி நிற்கும் ஆன்ம நிஷ்டையே உண்மை விளக்கமாம் இதுவே பகவான் காட்டும் ஞானப் பெருவழி.*

*மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்.*

*பகவான் பணியில் தங்கள்*

*ராம்மோஹன்*

# ரமணக்கண்

**வித்யாசங்கர்**

*கண் வெளி கண்டு காணாமல் இருள*
*கண்ணின்றி காண்பானை கண்டு மகிழ*
*கண்ணிருள் அகல கண் காண அருளே*
*கண்ணின் கண்ணே ரமண மாதேவே*

*கண்ணார கண்டு உளமார நெகிழ*
*கடைக்கண் வீசி காட்சி அருள்வாயே*
*கண் கொண்ட தெய்வமே ரமண ஒளியோனே*
*கண்ணின் கண்ணே ரமண மாதேவே*

*காட்சி பிழைகளெலாம் ஆட்சியில் உருக*
*கண்ணாற நின் பதத்தினை நானும் பருக*
*சாட்சியாய் நின்று பதமருள வந்தாயோ*
*கண்ணின் கண்ணே ரமண மாதேவே*

*கண்ணை கண்டு கண்கள் குளமாகி*
*கண்ணீரால் நின் ஞான பதத்தினை*
*கண் இமைகள் கொண்டு வருடேனோ*
*கண்ணின் கண்ணே ரமண மாதேவே*

*(கண்ணுக்கு கண்ணாய் கண்ணின்றி காணுனை*
*காணுவது எவர் பார் அருணாசலா)*

# தட்சிணாமூர்த்தி தோத்திரம்

## சிதம்பர குற்றாலம்

*பாடல் 8*

*குழவிமுன் நனவு முன்னாக் கூறுபல் அவத்தை எல்லாம்*
*சுழலிலும் கலந்திருந்தே சொலிக்கும்உள் அகமா நாளும்*
*சுழல் விழுவோர்க்கு யார் தன்னைக் காட்டுவான் சிற்குறிப்பால்*
*தழல்விழிக் குருவாம்அந்தத் தட்சிணாமூர்த்தி போற்றி*

*குழந்தை முதல் எல்லா வளர் பருவங்கள் மற்றும் நனவு, கனவு எனக் கூறப்படும் பல அவத்தைகள் எல்லாம் மாறி மாறி சுழன்று வந்தாலும் தான் மட்டும் மாறாமல் அவற்றுடன் கலந்திருந்து எப்பொழுதும் நான்நான் என்று பிரகாசிக்கும் தன் இருப்பை சரணடைந்தவர்களுக்கு சின்முத்திரையினால் விளக்குகிற அறியாமையை எரிக்கிற ஞான விழிகளையுடைய அந்த தென்முகக் குருவுக்கு வணக்கம்.*

*உலகியலில் எல்லா நிலைகளிலும் மாற்றங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. ஒவ்வொரு நாளும் எல்லா உயிர்களிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. உலகம் என்பது செயல் நிலைக்கும், ஒடுக்க நிலைக்கும் மாறி மாறி சுழன்று கொண்டிருப்பது. நீர்ச்சுழலில் சிக்கிக் கொண்டிருப்பவர்கள் வெளியே வரமுடியாமல் தவிப்பதுபோல இந்த மாற்றங்களின் வேதைகளிலிருந்து வெளியே வரமுடியாத நம்நிலையையே சுழல் என்கிறார்.*

*குழந்தையாக, பாலகனாக, இளைஞனாக, முதியோராக வளர் பருவங்கள் வருகின்றன. குழந்தையில் தொடங்கி முதுமையில் முடிவடைகிறது. இதுவே செயலுக்கும், ஒடுக்கத்துக்குமான சுழற்சி. முதுமையில் குழந்தை இருப்பதில்லை. அதுபோல நனவு, கனவு, தூக்கநிலைகள். நனவுலகில் தூக்கமில்லை.*

*தூக்க நிலையில் நனவுலகம் இருப்பதில்லை. கனவு தனக்கென புது உலகத்தை உருவாக்கி உலா வருகிறது. அதனால் விழித்தவனும், தூங்கியவனும் இல்லை. ஆனால் இந்த மூன்று அவஸ்தைகளிலும் பொதுவான, மாறாத ஒருவர் சாட்சியாக இருந்துள்ளார். ஆனால் இந்த அவஸ்தைகளால் அவர் பாதிப்படைவதில்லை.*

*ஒப்பு 1*

*"கனவிடையே நனவில்லை அவ்விரண்டும்*
*காரணமாம் சுழூத்திதனில் இல்லை யந்த*
*நனவு, கனா, சுழூத்திகளும் துரியத்தில் இல்லை*
*நாலுவித அவத்தைகளும் சுத்தத்தில்லை"*

*(ரிபுகீதை 2836)*

*ஒப்பு 2*

*யார் விழிப்பு, கனவு, ஆழ்துயில் என மூன்று நிலைகளில் நடைபெறும் எல்லாவற்றையும் அறியும் சாட்சியாக உள்ளாரோ, யார் மனத்தின் இருப்பையும், இல்லாத நிலையையும் அதன் செயல்களையும் உணர்ந்து உள்ளாரோ, யார் அகங்காரம் என்னும் எண்ண ஓட்டத்தின் அடிப்படையாக உள்ளாரோ என இந்த மாறாப் பொருளைப் பற்றி சங்கரர் விவேகசூடாமணியில் (125,126)ல் கூறுகிறார்.*

*தூக்கத்தைப் பற்றி பகவான்*

*தூக்கத்தை பொதுவாக அஞ்ஞானம்னு சொல்றாங்க. உண்மையிலேயே விழிப்பிலுள்ள போலி அறிவுதான் அஞ்ஞானம். மனமற்ற நிலையில் உள்ள பூரண அறிவே பிரக்ஞானம். சுருதி "பிரக்ஞானம் பிரம்மம்" ன்னு சொல்லுது. தூக்கத்தில் அது பிரக்ஞான கனமா உள்ளது. அது என்ன பிரக்ஞான கனம்?*

*விஞ்ஞானம், ஞானம் என இரண்டுள்ளது. இந்த இரண்டுமே சேர்ந்துதான் இயங்கும். விழிப்பு நிலையில் நான் எனக் கிளம்புவது விஞ்ஞானம். இந்த விஞ்ஞானம்,*

உடல் உலகங்களைப் பற்றினால் அஞ்ஞானம். அதுதான் போலி அறிவு. அது ஆத்மாவைச் சேர்ந்தால் ஞானம், மெய்ஞானம். அதுதான் அகண்டகார விருத்தி. இந்தப்போலி அறிவிலிருந்து முழுமையாக விடுபடும் பொழுது பிரக்ஞானமா இருக்கும். பிரக்ஞானமே திரண்டு மொத்தமா உருப்பெற்று இருக்கிற மாதிரி தூக்கத்தில் இருக்கிறதுனாலேயே அதுக்குப் பெயர் 'பிரக்ஞான கனம்'. தூக்கத்தில் உள்ள ஆத்மா சத், அசத் அல்லாதது.

வெறும் அறிவை எப்படி அனுபவிக்க முடியும். விஞ்ஞானம் இருந்தால்தான் அனுபவம் வரும். அனுபவம் வந்தவனே சுகமாகத் தூங்கினேன்னு சொல்ல முடியும். அனுபவத்தை நினைவு கூர்பவன் விஞ்ஞான ஆத்மா. அதாவது போலி நான். விஞ்ஞான ஆத்மா தூங்கும்போது அங்கிருந்தானா? அங்கு அவன் எப்படியிருந்தான்? கண்டிப்பா இப்ப இருக்கிறமாதிரி இல்லை. அங்கு அதிசூட்சுமமான விஞ்ஞான ஆத்மா, ஆனந்த கனமான பிரக்ஞான ஆத்மாவை மாயா காரணத்து மூலமாக அனுபவிக்கிறது. சந்திர ஒளியை மரத்தோட கிளைகள் இலைகளுக்கு ஊடாயிருந்து பார்க்கிற மாதிரி. இதன் மூலம் அனுபவிக்கிறவன், அனுபவிக்கும்பொருள், அனுபவம் மூன்று நிலையிலும் இருக்குங்கிற முடிவுதான் வருகிறது. ஸ்தூல, சூட்சும தரம் மாறுபடுகிறது. சுத்த நானோட பரிச்சயம் நமக்கும் இல்லாததால் அது அனுபவம் ஆகவில்லை. அதை தெரியணும்னா முழு விழிப்போடு அது என்னண்ணு பார்க்கணும்", என பகவான் விளக்குகிறார்.

காலத்திலும் பருவ மாற்றங்கள், நடந்து கொண்டிருக்கின்றன. பருவத்திற்கேற்ப மரம் செடி கொடிகளும் மாறுகின்றன. தொடர்ந்த மாற்றத்தில் ஒன்று உள்ளது என்று கூறுவது அடுத்த கணமே இல்லாமல் பொய்யாய் போய்விடுகிறது. இந்த மாற்றங்களுக்குப் பின்னால் மாறாத ஒன்று உள்ளது. சக்கரங்கள் சுழல்வதற்கு

*நிலையான அச்சாணி தேவை. நிலையான ஒன்றின் ஆதாரத்திலேயே நிலையற்றவைகள் சுழல முடியும். எந்த மாற்றமும் இல்லாமல் சாட்சி மாத்திரமாய் இருந்து மாற்றங்களை கவனித்துக் கொண்டிருக்கிற நிலைத்த பொருள் அது. அதுவே 'நான்' அதுவே 'ஆத்மா'.*

*நீக்கமற நிறைந்திருக்கிற அவன், மாற்றங்களிலும் கலந்திருக்கிறான். முதுமையிலும் இளமைக்கால அனுபவங்களை அசைபோடுகிறோம். எல்லா மாற்றங்களிலும் ஊடாக அவனிருந்தாலும் தனது மாறாத தன்மையால் மாற்றம் அடையாதிருந்தான் அசைவிலுள்ள பொருள்களே மாற்றம் அடைகின்றன.*

*அவனோ சலனமில்லாதவன். எல்லா அசைவுகளிலும் அசையாப் பொருள் ஊடாக இருக்கிறது. அதுபோல எல்லா மாற்றங்களிலும் மாற்றமில்லா அவன் ஊடாக இருக்கிறான். சாட்சி மாத்திரமாக இருக்கும் ஆன்மா பாதிப்படைவதில்லை.*

*உள்ளே எப்பொழுதும் நான் நான் என்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் மாற்றமில்லா இந்த நிலைத்த பொருளை சரணடைந்தவர்களுக்கு குருவாய் வந்த ஞானவிழி அக்னியால் அறியாமையை அழித்து சின்முத்திரை மூலம் விளக்கிய தென்முகக் கடவுளுக்கு வணக்கம்.*

*ஒப்பு*

*"உன்னிடத்தில் ஒப்புவித்த உள்ளத்தால் எப்பொழுதும்*
*உனைக்கண்டு எல்லாமும் உன்னுருவாய் அன்னியமில்*
*அன்புசெயும் அன்னோன் அருணாசலா வெல்கும்*
*இன்புருவாம் உன்னில் ஆழ்ந்தே."*

*(அருணாச்சல பஞ்சரத்தினம், 5)*

*சரணாகதி நிலையை இப்பாடலில் பகவான் விளக்குகிறார். உன்னை முழுமையாகச் சரணடைந்து உள்ளத்தை உன்னிடம் ஒப்படைத்து தன்னை இழந்து,*

உன்னில் கலந்து அன்னியமற்று ஏகமானதால் காணும் பொருள்கள் அனைத்திலும் உன்னையே காண்கின்றான். மனம் உள்ள பொழுதுதான் நான் என்கிற தனித்தன்மை வருகிறது. தன்னை இழந்த மனமற்ற ஏகநிலையில் எல்லாம் நீயே என்பதை உணர்ந்து எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துகிறான். அருணாசலா, பேதமற்று போனதால் உனது பேரானந்த வெள்ளத்தில் ஆழ்ந்து விடுகிறான். நமது இயல்பே ஆனந்தம் என்பார் பகவான் ரமணர்.

ஆனந்தமும் ஆத்மாவும் வேறல்ல. ஆத்மாவில் ஆழ்ந்து போகிறவர்கள் தனது முயற்சியில் வெற்றி பெற்று முழுமை அடைகிறார்கள்.

*(தொடரும்)*

# இனிவரும் திருநாட்கள் 2025

| பூஜை/விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| *மஹா கும்பாபிஷேகம்* | *20/08/2025* | *புதன்* |
| *பகவான் அருணையை அடைந்த தினம்* | *1/09/2025* | *திங்கள்* |
| *நவராத்திரி விழா துவக்கம்* | *22/09/2025* | *திங்கள்* |
| *சரஸ்வதி பூஜை* | *01/10/2025* | *புதன்* |
| *விஜயதசமி* | *02/10/2025* | *வியாழன்* |
| *தீபாவளி* | *20/10/2025* | *திங்கள்* |
| *கார்த்திகை தீபோற்சவம் துவக்கம்* | *25/11/2025* | *செவ்வாய்* |
| *கார்த்திகை தீபம்* | *4/12/2025* | *வியாழன்* |


ATTENTION
ஸ்ரீ ரமணாஸ்ரமம்
மஹா கும்பாபிஷேகம்
20-08-2025

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

**மௌனிசாது**
**மொழிமாற்றம்: ராம் மோஹன்**

## 37. இறுதி நாட்கள்

கொழும்புவிலிருந்து பயணிக்கும் ஒரு நீராவிக் கப்பலில் எனது பயணத் தேதி மாற்றம் உறுதி செய்யப்பட்டது என்றும் அந்தக் கப்பல் இன்னும் பதினைந்து நாட்களில் கொழும்புவிலிருந்து கிளம்புகிறது என்றும் சென்னையில் இருந்து வந்த கடிதத்தின் வாயிலாக அறிந்தேன். அப்படியானால், இன்னும் சில நாட்களிலேயே நான் ஆஸ்ரமத்தையும் மகரிஷிகளின் ஆன்மிக அருகாமையையும் விட்டு நீங்கிச் செல்ல வேண்டுமே! அப்படியானால் மகரிஷியின் பாதகமலங்களின் அருகாமையில் அமர்ந்து, மாலை வேளைகளில் நான் இதுகாறும் பெற்றுவந்த பரவச நிலையும், ஆன்மிக சக்தி என்னை முழுதுமாக உயர்நிலைக்கு ஏற்றம் தந்ததை ஒரு புதிய முடிவற்ற ஆனந்த நிலைக்கு என்னை அழைத்துச் சென்ற உணர்வும் இப்போது முடிவுக்கு வந்துவிடுமே!

அப்புறம் என்ன? மீண்டும் நான் சுவையற்ற எனது பழைய வாழ்க்கைக்கு திரும்ப வேண்டுமா? இக் கேள்விகட்கு எல்லாம் எனது மனதிலிருந்து விடையேதும் கிடைக்கவில்லை. என் மனதின் விடைதான் மௌனம். என்னைச் சிக்க வைக்கும் சங்கிலி. என் மனம் எனது பழைய வாழ்க்கையின் உரிப் பொருட்களான எல்லாவற்றிற்கும் காரணம் கண்டு

*பிடித்தல், முடிவுறா சந்தேகங்கள், குறுக்கு வழியில் வெற்றிபெற முனைதல் போன்றவற்றிற்குச் திரும்பிச் செல்வதில் ஈடுபட விரும்பும் என்பதில் ஐயமில்லை. ஆயின், அந்த அர்த்தமற்ற பழைய வாழ்க்கையில் மீண்டும் ஈடுபட முடியாது. என்னுள் அனைத்தும் இப்போது மாறி, மறுபிறவி எடுத்துள்ளது. இது எனது பழைய வாழ்க்கை அல்ல.*

*என் வாழ்வு தனக்கு வழக்கமான ஊடகத்தின் வழியாகச் செயல்படும் தேவையில்லை. எனது ப்ரக்ஞை உணர்வு வழக்கமான ஊடகத்தையும் தாண்டிச் செயல்படும் தன்மையை அடைந்துள்ளது. எனது சக்தி இப்போது நான் என்னுடைய நம்பிக்கைக்கு எனது மனதின் மீதல்ல. மகரிஷி இது குறித்து கூறியது என் காதில் ஒலிக்கிறது.*

*மனிதனின் முன்னேற்றத்தில் அவனது மனப்பாங்கு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது என்பது உண்மையே ஆயினும் உண்மையான முன்னேற்றத்தில் மனதின் பங்கு சிறியதும் கட்டுக்குட்பட்டதும் ஆகும். அது அவனை ஒரு குறிப்பிட்ட எல்லைவரைதான் அழைத்துச் செல்லும். அந்த எல்லைக்குப் பின் ஒரு புதிய முயற்சியைத் தொடங்க வேண்டும்.*

*என் மனதில் முன் இருந்த நிலையில் எப்போதும் மாறுபட்டுக் கொண்டு இருப்பதை ஆராய வேண்டும் என்ற பேரார்வம் ஒரு சக்தி வாய்ந்த தூண்டுதலாக இருந்து வந்தது. இப்போது அதன் தீவிரம் ஏதும் என்னை அப்படி ஏற்றுக் கொள்வதில்லை என்பதை உணர்கிறேன். இப்பொதெல்லாம் அத்தகை பேரார்வ ஈடுபாட்டினால் பயன்ஏதும் இல்லை அதனால் நிரந்தர விளைவு ஏதும் கிடைக்கப் போவதில்லை. இது ஒரு பயனற்ற விஷ சுழற்சி. அதைக் கைவிட வேண்டியதுதான் என்ற உறுதிப்பாடு என் மனதில் எழுந்தபிறகு என் மனதில் மீண்டும் பேரமைதி நிலவத் தொடங்கியது.*

*இப்போது நான் ஆஸ்ரமத்தில் எனது மீதமுள்ள வாழ்நாள் முழுதும் கழித்தாலும் அல்லது ஆஸ்ரமத்தை விட்டு நீங்கி உலகம் முழுவதும் சுற்றித் திரிந்தாலும் சரி இரண்டும் ஒன்றே என்ற மனப் பக்குவத்தை அடைந்து இருந்தேன்.*

*இந்த மெய்யுணர்வு அடைதலின்போது நம்ப இயலாத, முற்றிலும் நம்மை விழுங்கும், விவரிக்க இயலாத பேரானந்த நிலையையும் நாம் எய்துகிறோம்.*

*இந்தப் பேருணர்வு அனைத்தையுமே அணைத்துக் கொள்ளும். எப்போதும் அறிவுறாத வாழ்வுணர்வை அநுபவிப்பதை ஒத்துள்ளது.*

*'இறப்பு என்று ஒன்றுள்ளது' என்ற நம்பிக்கை எப்போது மற்றும் எங்கே என்னுள் பதிந்தது என்பதை நான் கவனிக்கவில்லை. தர்க்கம் சார்ந்த ஆராய்ச்சி இல்லாமல் சுய அநுபவத்தின்மூலம் இதனை நான் அறிந்தேன். நான் இப்போது ஞாபகத்தில் இருத்தி திருப்பி எல்லாம் என்னுடைய உள்ளுணர்வில் பதிந்துள்ளது. மீண்டும் மீண்டும் நான் மரணத்தை நேருக்கு நேர் சந்திக்கும் கற்பனை உணர்வுகளே.*

*இந்த கற்பனைகளின்போது எனது ஆளுமை முழுதும் அழிக்கப்படுகின்றது. அந்த ஆளுமை அழிந்தபின் நான் என்பதில் மீதம் என்ன உள்ளது என்பதை நான் நோக்குகிறேன். நான் செய்த இத்தகு ப்ரக்ஞை கடந்த பயிற்சிகள் எனது உள்ளுணர்வு சார்ந்த பயிற்சிகள் உலக வாழ்வின் நாமரூபம் மீது கொண்ட பற்றுகளை உதறும்போது, இங்ஙனம் இவ்வுலக வாழ்வில் எனது நாமரூபம் என்னும் தளையை உதறும்போது இவை அனைத்தும் எனது கனவுலக நிகழ்வுகளே என எண்ணும்போதுகூட இதையெல்லாம் கடந்த ஏதோ ஒன்று சுதந்திரமாகவும் முற்றிலும் தற்சார்பு உடையதாகவும் எஞ்சி நிற்கிறது.*

*எந்த வினாடியிலும் அனைத்தையும் விட்டு நீங்க ஆயத்தமாய் இருக்கும் தயார் நிலையே பரிபூர்ணத்தை அடைவதற்கான நுழைவாசல்.*

*எல்லா நிகழ்வுகளிலும் சந்தோஷமானாலும் சரி துக்க நிகழ்வு ஆனாலும் சரி. என் மனதின் பின்புலத்தில் இவை அனைத்துமே பொருளற்றவை என்ற மறைபொருள் கொண்டது. என்றும் தங்கி உள்ளது என்னுடைய மிகக் குறுகிய சிறிய அளவுக்கு உட்பட்ட முழுதும் நிழல்களால் நிரம்பிய எனது மனதின் இருள் நிரம்பிய இடங்களில் மனதில் எங்ஙனம் பகவானின் ஞானக் கதிரியக்கம் உட்புகுந்து இருளை நீக்கியது என்பதையோ, எதனால் இது நிகழ்ந்தது என்பதையோ நான் அறியேன். பாரத தேசம் தந்த பெரும் ஞானிகளில் ஒருவரான கபீரை தமது சீடர் ஒருவர் கேள்வி கேட்கிறார். ஆன்மிக வாழ்வின் ஆழ்ந்த மர்மங்கள் குறித்து நீங்கள் எங்ஙனம் அறிவீர்கள்? மற்றும் மனித வாழ்வீன் குறிக்கோள் மற்றும் விதி குறித்து நீங்கள் அறிவது என்ன?*

*கபீர் அதற்கு விடை தருகிறார், ஒரு கண் பார்வை அற்றவனால் பார்க்க முடியாவிட்டால்கூட, சூரியன் நமக்கு தெரிந்தாலும்சரி, தெரியாவிட்டாலும் சரி எல்லாவிடத்தும் சமமாக ஒளி நல்குகிறான். நீங்கள் கேட்டவை குறித்து நான் அறிந்துள்ளேனா இல்லையா என்பது முக்கியமல்ல, இறைவன் அவற்றை முற்றிலும் அறிவான்.*

*பகவானிடம் இருந்து பிரிந்து செல்கிறேனே என்று சில நாட்களாக நான் அனுபவித்த மனோவலி இப்போது முற்றிலும் நீங்கிவிட்டது. அவரது சில விளக்கங்கள் எனக்கு விநோதமான வழியில் வருகின்றன. மற்றொரு மனிதரிடமிருநது வரும் விளக்கம்போல அல்லாது, அவை என்னுடைய இதயத்தின் ஆழத்தில் இருந்து வருகின்றன.*

*இப்போது நான் ஒரு தவறான வார்த்தையை பிரயோகித்து விட்டேன், மற்றொரு மனிதர் என்பது தவறான வார்த்தைப் பிரயோகம். வேறு ஒருவர் என்று ஒருவர் எப்படி இருக்க முடியும்? உடனே உள்ளிருந்து இந்தப் பிரயோகம் சரி செய்யப்படுகிறது. நான் என்னை உடனே திருத்திக் கொள்கிறேன். இங்ஙனம் ஒவ்வொரு விநாடியும் என் தவறுதல்களைத் திருத்தி என்னை சரி செய்யும் பகவானின் மகத்தான கருணைக்கு நான் எங்ஙனம் கைம்மாறு செய்வேன்? பகவான் தனது குரல் பிரயோகமோ, சொற்பிரயோகமோ இல்லாமல் சுத்த மௌனத்தில் விடை இறுக்கிறார். நீ என்ன நினைக்கிறாய்? தாய் காட்டும் மீதூறும் அன்பிற்கும் காப்பிற்கும் பெற்றோர்கள் தமது குழந்தைகளிடம் இருந்து எதிர்பார்க்கிறார்களா என்ன?*

*நம்முடைய சராசரி வாழ்வில் நம்முடைய தோழனாக, நிபந்தனையற்ற முற்றிலும் நம்பிக்கைக்கும் பாத்திரமான நம்மீது அன்பு செலுத்தும் ஒருவரை மிகத் துர்லபமாகவே காண முடிந்தது.*

*நம்முடைய முழு பிரக்ஞையும் அத்தகைய நம்பிக்கை தரும் ஒருவரது பிரக்ஞையுடந் ஒன்றும் போதுதான் இது நிகழ முடியும். வழக்கமாக நாம் நமது சிறந்த பக்கத்தையே மற்றையோருக்கு வெளிப்படுத்த விரும்புகிறோம். நமது குறைகள் கொண்ட மனப்பாங்கினை பிறர் அறிந்தால் அவர் நம்மைவிட்டு விலகிவிடுவார் என்று கருதி அதை மறைக்கின்றோம். நமது சொற்களையும் செயல்களையும் வெகு ஜாக்கிரதையாக பிரயோகிக்கின்றோம். இத்தகைய செயல்பாடுகள் அனைத்தும் பொய்ம்மையானதும், செயற்கையானதும் ஆகும். போலித்தனமான நாடகம் தனது நுண்ணிய வடிவில் இத்தகைய பொய்மைச் செயல்பாடுகளின் மூலம் தன் உண்மை வடிவை மறைத்துக் கொள்கிறது. பகவானிடம் இத்தகைய பாசாங்கு எதுவுமே இல்லை. நம்முள் உள்ள*

அனைத்தையுமே அவர் முற்றும் அறிந்தும், தெரிந்தும் உள்ளார் என்பதையும்

பௌதிக நிலையில் பிரக்ஞை உணர்வில் பொறிகட்கு இடையே ஏற்படும் இணைப்புகள் மனித உருவில் நிகழ்கின்றன. இது அமானுஷ்ய நிலையில் எங்ஙனம் நிகழ்கிறது என்பதை உலகம் அறியாது. தன்னுயை அறிவிற்கு எட்டாத நிகழ்வுகளை குறித்து உலகம் ஏளனமாக சிரிக்கவும் கூடும். எனவே இந்நிகழ்வுகள், உலகியல், வெறும் உலகாயதக் கன பரிமாணங்களைக் கடந்து தனது அறிவுக்கு எட்டாத நிலை குறித்து உலகம் அக்கறை காட்டுவதில்லை.

அவர் எதனையுமே தீர்ப்பு நோக்கில் மதிப்பீடு செய்வது கிடையாது. நம்மைப் பற்றி அவர் கொண்டுள்ள மனோ பாவமும் அணுகு முறையும் அவர் நமது பாவங்களையும் குறைகளையும் முற்றும் அறிந்திருந்தாலும் சற்றும் மாறுவதில்லை. இந்த மனோ விகாசமே அவரது எல்லையற்ற சக்தியின் அடிப்படை ரகசியம்.

நம்முடைய குறைகளையும் பலவீனங்களையும் அவர் தனது இந்த சக்திமயமான தாக்கத்தால் நீக்கிவிட உதவுகிறார். அதேசமயம் நாம் நமது பரிணாம உயர்வை அடைய வேண்டுமெனில் சில அடிப்படை நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும். இல்லையெனில் நம் குறைகள் நம் பரிணாமத்திற்கு இடையூறு செய்யும். உலகின் தலைசிறந்த கேமராகூட அதன் ஷட்டர் சரியாகத் திறந்து மூடாவிடில் சரியான படத்தை தராது. அதுபோல நமது பிரக்ஞை உணர்வாம் ஷட்டர் நிரந்தரமாக முடியிருந்தால் நமது குருநாதரைக் காணாமல் மூடியிருந்தால், பகவான் வெளியிடும் ஆன்மிக ஒளியை எங்ஙனம் காணமுடியும்?

சில ஆண்டுகளுக்கு முன் நானேகூட இவ் விஷயங்களைக் குறித்துப் பேசும்போது விமர்சித்து

*இருக்கலாம். பகவானைச் சந்தித்து அவர் திருவடி நிழலில் அமர்ந்த பிறகு என் உள்ளத்தில் பேரமைதி நிலவுகிறது.*

*இந்தப் பேரமைதியில் இருந்து நான் உணர்வது என்னவெனில் இங்குள்ள ஒவ்வொருவர் இதயத்திலும் கண்ணிலும் பகவானைக் காணலாம். பரமாத்ம சத்யத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து அமரும்போது வேறுபாடுகள் எவையும் மறைகின்றதல்லவா? அங்கே ஒரு நிழல்கூடப் படியாதல்லவா?*

*** *** ***

*கடந்த சில நாட்களில், நாங்கள் வழக்கம்போல் பகவானின் கூடத்தில் அவர்முன் அமர்ந்து தியானம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் புற்று நோய்க்காகச் செய்யப்பட்டுவரும் புதிய மருத்துவ சிகிச்சை காரணமாக அவர் மிகவும் பலவீனமாக காணப்பட்டார். நாங்கள் ஒரே ஒரு கதவு வழியாகக் கூடத்திற்குப் போய், பகவானை வணங்கிவிட்டு, மற்றொரு கதவின் வழியே வெளி வரவேண்டும். இத்தகைய ஒழுங்குமுறை ஆஸ்ரமத்தில் வந்து சில நாட்களாகத் தங்கியுள்ள பக்தர்களால் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. ஆஸ்ரமத்தில் உள்ள இந்துசமய அன்பர்களும் இத்தகைய ஒழுங்குமுறையை கண்காணித்தனர்.*

*ஒருநாள் மத்தியான வேளையில் ஒரே ஒரு பிராம்மண அணுக்கத் தொண்டர் அன்றி வேறு ஒருவரும் பகவானின் கூடத்தில் இல்லை. சில நேரம் பகவானின் சந்நிதியில் இருந்துவிட்டுச் செல்லலாம் என நான் அங்கே வந்தேன். நான் செய்யும் எல்லா ஆன்மிக பிரயத்தனங்கட்கும் என்னுடைய ப்ரக்ஞை உணர்வில் இப்போது ஏற்பட்டுக் கொண்டிருக்கும் எல்லா மேம்பாட்டிற்கும் அவரது சந்நிதியில் என்னுள் நிகழ்ந்து கொண்டு இருக்கும் தர்க்கங்களுக்கும் எவரது அனுமதியைப் பெற வேண்டும் என்ற விநோதமான*

*உந்தல் என்னுள் நிகழ்ந்து கொண்டு இருந்தது. நான் பெற்றுள்ள இந்த உயரிய வெகுமதியான இந்த ஆன்மிக மேம்பாட்டைக் குறித்த விளக்கம் வேறு எவரிடமிருந்து கிடைக்கிறது என்று உள்ளுணர்வு கூறியது.*

*இங்கு நான் காண்பது என்னவெனில் பகவானின் ஆஸ்ரமத்தை அண்டிவரும் ஆயிரக்கணக்கானவரில் மிகச் சிலரே அவரது ஞான ஒளியால் பயன் பெறுகின்றனர். இந்த வினாடியில், அவர் சந்நிதியில் நான் அமர்ந்திருக்கும்போது இதை நான் உணர்கிறேன். ஆனால் நான் உலகாயத விஷயங்கட்குத் திரும்பும்போது இந்த ஞானக் கதிரொளியை மறந்து பயனற்ற செயல்களில் ஈடுபடும்போது இதை மறந்து விடுகிறேன். அதனால்தான் இப்போது என் மனதில் எழும் கருத்துணர்வுகள் உடனுக்கு உடனே பதிவு செய்து விட ஆர்வத்துடன் முனைகிறேன். பல சமயங்களில் மக்கள் தமது பழைய பாரபட்சமான கருத்துக்களையும் அபிப்ராயங்களையும் நம்பிக்கைகளையும் உதறித்தள்ள இயலாமல் உள்ளனர். பகவானைக் கண்ணுறும்போது அவருக்கு யோகி, சாது, மஹாத்மா என்று பல்வேறு பெயரைக் கொடுக்க முயற்சிக்கிறார்கள். அவரைத் தமது சொந்தக் கருத்து என்னும் நிறம்பூசிய கண்ணாடி வழியே காண்கின்றனர். ஆத்மிகத்தைப் பற்றிய தங்கள் அறிவின்மையில் விளைந்த தவறான கருத்துக்களால் அவருக்கு மகுடமிட்டு மகிழ்கின்றனர்.*

*அவர்களது கருத்துப்போக்கு இங்ஙனம் செல்கிறது. ஆம், அவர் உண்மையில் ஒரு மஹா ஞானி! ஆனாலும் உலகில் அவருக்குமுன் புத்தர் கிறிஸ்து போன்ற மாபெரும் ஞானிகள் இருந்துள்ளனர். அவர்களது மகத்துவத்தை யாரும் மறந்திட இயலாது. மற்றும் சிலர் கூறுகின்றனர், உயர்ந்த இமாலயத்தில் பல அற்புதங்களைச் செய்யும் யோகிகள் வாழ்கின்றனர். அவர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து கொண்டு*

*இருக்கின்றனர். இயற்கையின் சக்திகளை அவர்கள் தம் கட்டுக்குள் வைத்துள்ளனர். அவர்கள் பகவானைவிட உயர்ந்தவர்கள் அல்லவா? குறைந்தபட்சம் அவருக்கு நிகரானவர்கள் இல்லையா?”*

*உயிரோட்டமாக நம்முன்னே வந்துள்ள பகவானின் பேரருளால் பயன் பெறுவதைவிட்டு விட்டு அவர்கள் இங்ஙனம் காணாத யோகிகளைக் குறித்து கருத்துரை ஆற்றுகின்றனர்.*

*இத்தகையோரைக் குறித்துதான் கிறிஸ்து கூறியுள்ளார்: கண்கள் படைத்தும் நீங்கள் காணாது இருக்கின்றீர்கள். காதுகள் இருந்தும் நீர் கேளாது இருக்கின்றீர்கள்!’*

*இத்தகைய அறைகுறை அறிவுடையோர் ஏனைய மஹா குருக்களைப் பற்றி அறிந்ததெல்லாம் அவர்களது சீடர்கள் இடம் இருந்தோ அல்லது பிந்தைய நாளில் வந்த வரலாற்று ஆசிரியர்கள் எழுதி வைத்த இரண்டாம் தடவை வடிகட்டின கதைகளே. இவற்றுள் அந்த மஹான்களே அவர்களது தேச சஞ்சாரத்தின்போது கண்டதுமில்லை. நம்மிடையே வந்து நாம் குருவாக வரித்துள்ள மகான்கள் உயிரோட்டமான சாந்நித்யம் படைத்தவர்கள். இவர்கள் நம்மிடையே அவதரித்து இருப்பது நிரந்தர ஆத்மிகப் பேருண்மைகளை நாம் அறியக்கூடிய மொழியில் எளிதாக வழங்குவதே. பகவானது தெய்வீக ஒளி தவழும் தோற்றத்தை நேருக்கு நேர் கண்டபின்பும் உணர முடியாதவர்கள் அந்த மஹத்தின் மகத்துவத்தை நன்கறிந்து திருப்தி அடைய முடியாதவர்கள் நோக்கம் எல்லாம் ஏதோ ஓர் மாறுபட்ட செயல்களைக் கண்டு அதிசயப்பதுதான். அவர்கள் எதிர்ப்பார்ப்பதெல்லாம் அவர் தலைமேல் ஒரு பிரகாசமான ஒளிவட்டம் இருக்கும் அல்லது தமது உடல் நோய்களை அந்த மகான் தொட்ட உடனே குணமாகுதல் என்பது போன்றதுதான். அப்படி ஒருவேளை அற்புதங்கள் நிகழ்ந்துவிட்டால் அப்போதும்*

*அவர்கள் திருப்தியுற மாட்டார்கள். அவர்கள் அவர்கட்கு உள்ளே ஏதோ ஒரு மின்சாரக் கம்பியோ கருவிகளையோ ஒளித்து வைத்திருப்பார்களோ என ஐயமுறுவார்கள்.*

*தமது உடல் குணமானதுகூட அற்புதத்தினால் அல்லாமல் நேற்று, தாம் உட்கொண்ட புதிய மருந்தினால்தான் என எண்ணிக் கொள்வார்கள்.*

*இத்தகைய அறிவற்றோர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்திருந்து இப்போது தங்களால் புகழுப்படுகின்ற தேவகுமாரன் தெருத்தெருவாய் இழுக்கப்பட்டு மிகக் கேவலமான சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வைக் கண்டபோது, நீ உண்மையில் தேவகுமாரன் ஆக இருந்தால் சிலுவையிலிருந்து இறங்கி வா, பார்க்கலாம்! என்று கூறியிருப்பார்கள்.*

*இத்தகையோரைக் குறித்துதான் இயேசு கிறிஸ்து கூறினார், இவர்கள் ஏதோ ஒரு தெய்வீகச் சமிக்ஞையைத் தேடிக் கொண்டு உள்ளார்கள். அது என்றுமே அவர்கட்கு கிடைக்காது.*

*உலகாயதமே உயிரெனக் கொண்டு வாழும் மனிதர்கள் இடையே செய்யப்படும் அற்புதங்களை முற்றிலும் பயனற்றவை அல்லவா?*

*இப்போதெல்லாம் அற்புதங்கள் மிக அரிதாகவே, சில சிறப்பு வாய்ந்த சமயங்களில் மட்டும் நிகழ்கின்றன என்று எனக்குத் தோன்றுகின்றது. நான் இப்போது புரிந்து கொண்டேன். பரமாத்மாவானது இத்தகைய அற்புதங்கள் ஒரு நிரந்தரமான நன்மைகள் கொள்ளாதவரை அவற்றை சாதரணமாக நிகழ அனுமதிக்காது.*

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### 29. மெய்நெறி

*குறள் 281: செல்லல் நிகழல் வருங்கால மூன்றினையுஞ்*
*சொல்லு மவுனத் தொழில்.*

*பொருள்: உந்திக் கமலத்தில் நிற்கும் மணிபூரக சக்கரத்தில் செய்யும் தியானத்தில் முக்காலத்தையும் அறிந்து செயல்பட முடியும்.*

*விளக்கம்: திருமந்திரப் பாடல் இதே கருத்தை தீர்க்கமாய் விளக்குகிறது.*

*"விளங்கிடும் வாயுவை மேலெழ உன்னி*
*நலங்கிடுங் கண்டத்து நாபியி நுள்ளே*
*வணங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிச்*
*சுணங்கிட நின்றவை சொல்லலு மாமே."*

*இந்தப் பாடலில் எங்ஙனம் யோகப் பயிற்சி செய்ய வேண்டும் என்று திருமூலர் வழிகாட்டுகிறார்.*

*பிராணனை மேல்நோக்கி எழுமாறு செய்து, ஜாலந்திர முத்திரையைப் பயின்று அப்யசிக்க வேண்டும். உட்யான பந்தம் போன்ற உதர பந்தப் பயிற்சி செய்யும்போது பிராணன் அடங்கி நிற்கிறது. ஸஹஸ்ராரத்தில் ததும்பும் அமுதம் நிறைகிறது.*

*மற்றும் ஒரு திருமந்திரப் பாடலை நோக்கில் இக்கருத்து தெளிவடையும்.*

*"தூர தரிசனம் சொல்லுவான் காணலாம்*
*கார் ஆரும் கண்ணி கடை ஞானம் உட்பெய்திட்டு*
*ஏர் ஆரும் தீபத்து எழில் சிந்தை வைத்திடில்*
*பாரார் உலகம் பகல் முன்னது ஆமே."*

பரவெளி முடிவற்றது. அங்கே சிவனை எங்ஙனம் வணங்குவது? மழைமேகம் போன்று அருளைப் பொழிகின்ற ஞானத்தில் ஞானமாம் திருவடி உணர்வை உள்ளத்தே உணர்ந்தால் நமது இதயமே அழகுமிக்க ஜோதி வடிவம் பெறும். காணும் அத்தனை உண்மைகளும் பட்டப்பகலில் காணும் பொருட்கள்போல் நிதரிசனமாக விளங்கி, இத்தகைய தரிசனம் முக்காலத்தையும் உணர்த்திவிடும்.

குறள் 282: பஞ்சிற் படுபொறி போலப் பரந்திருந்து
துஞ்சாது ஞானச் சுடர்.

பொருள்: மூலாதாரத்து மூண்டெழு கனலை, பிராணாயாமத்தில் எழுப்பி, ஞானத்துடன் இணைத்து விட்டால், பஞ்சில்பட்ட நெருப்புபோல் ஞானச் சுடர் எங்கும் படர்ந்து பரவி மறையாமல் பிரகாசித்திருக்கும்.

குறள் 283: இமைப்பிற் பரந்தங் கொடுங்கு மின்போல்
நமக்குட் சிவன்செயல் நாடு. 283

பொருள்: இமைக்கும் நேரத்தில் தோன்றி, எங்கும் பரவி, உதித்த இடத்திலேயே மறையும் மின்னல் போன்ற சிவன் அருளும் நம்முடைய கணப் பொழுதில் தோன்றும்.

இதே கருத்தை பகவான் ரமணர் உபதேச உந்தியார் 10 ஆவது பாடலில் எழுதி உரைக்கிறார்.

"உதித்த விடத்தி லொடுங்கி இருத்தல்
அதுகன்மம் பத்தியும் உந்தீபற
அதுயோகமும் ஞானமும் உந்தீபற."

குறள் 284: குவித்து மனத்தைக் குவித்துள்ளே யோங்கில்
செவித்துப் பெறுவ தெவன்.

பொருள்: மனம் என்பது எண்ணற்ற எண்ணங்கள் அலை பாய்வதன் தொகுப்பு. 'நான் யார்?' என்ற விசாரத்திலேயே ஆழ்ந்து ஒருமுக நோக்கில் உள்ளே

ஆழ்ந்து 'நான் யார்' என்பதை ஆராய வேண்டும். ஆத்ம விசாரம் ஒன்றே நம்மை நேரடியாக ஆன்ம சாட்சாத்காரத்தில் கொண்டு சேர்க்கும்.

திரும்பி அகந்தனைத் தினமகக் கண்காண்
தெரியுமென் றனையென் னருணாசலா

என்று அக்ஷரமணமாலை 44 ஆவது பாடலில் பகவான் உறுதிபடக் கூறுகிறார்.

குறள் 285: காலுந் தலையு மொன்றாகக் கலந்திடம்
நாலா நிலையென நாடு.

பொருள்: நம்முள்ளே உயிர்க்கும் பிராணனும் உச்சந் தலையில் ஆயிரம் இதழ்த் தாமரையைப் பிரணவத்தில் ஒன்றாய்க் கலப்பதே இறுதி ஆன்ம விடுதலை. இதுவே துரியாதீத நிலை எனப்படுவது.

இதையே விளக்கமாக திருமந்திரம் 2159 ஆம் பாடலில் திருமூலர் கூறுகிறார்.

"துரியம் இருப்பதும் சாக்கிரத்து உள்ளே
நரிகள் பதினாலும் நஞ்சு உண்டு செத்தன
பரிய புரவியும் பாறி பறந்தது
துரியம் இறந்த இடம் சொல்ல ஒண்ணாதே."

பிரணவ யோகிகளின் துரியநிலை நின்மல ஜாக்ரம் எனப்படும். அங்குள்ள நிலை ஒளியில் வஞ்சனையை செய்யும் இந்திரியங்கள் மற்றும் அந்தக் கரணங்கள் செயல்படாமல் அடங்கி விடும். மூலப் பிராணன் வேகமாகச் சென்று (ஓசை முதலிய ஐந்து) வான் கூற்றை அடையும்.

'ஞானேந்திரியம்' ஐந்து, 'கர்மேந்திரியம்' ஐந்து அந்தக் கிரணங்கள் ஐந்து இவைகள் (14 லும்) நரிகளாக உருவகம் செய்யப்பட்டுள்ளது.

துரியம் கடந்த துரியாதீத நிலையை விவரிக்கவும் ஒண்ணாதே.

*குறள் 286: மூல நிலமிசை மூன்றா நிலத்தினில்*
*ஆல மருந்துஞ் சிவம்.*

*பொருள்: மூலத்தில் இருக்கும் ப்ருத்வி (மண்) தத்துவம் மூலாதாரத்தில் குண்டலினி சக்தியால் ஒளிர்கிறது. மூன்றாவது நிலையாகிய சந்திர மண்டலத்தினை அடைந்தவுடன் அதாவது துரியத்தை அடையும்போது, ப்ரம்மாகாசத்தில் பரஞ்சோதியில் ஒன்றாகக் கலக்கும்போது அங்கே நீலகண்ட சிவத்தின் தரிசனம் சித்திக்கிறது.*

*தந்திர சாஸ்திரத்தில் மூலாதாரத்தில் யோக முக்கோணமும் நாற்சதுரமும் உள்ளன. உயிர்ப்புகள் ஒத்துப் பொருந்தும்போது சந்திர மண்டலத்தில் திருக்கோலங்களாய் வெளிப்படுகின்றன. மூலாதாரத்தில் இருந்து சுழுமுனை நாடி வழியாக பிராணனை சஹஸ்ராரத்தால் வழிப்படுத்திச் செலுத்தும்போது பரஞானம் சித்திக்கிறது. அந்நிலையில் வழக்கமாய் நஞ்சு எனக் கருதப்படும் தீயவை அனைத்தையும் விழுங்கும் நம்மைத் தூயவர் ஆக்கும் நீலகண்டனாக சிவன் தரிசனம் தருகிறான்.*

*குறள் 287: எழுஞ்சுட ருச்சியின் மேன்மனம் வைக்கத்*
*தொழிலொன் றிலாத சுடர்.*

*பொருள்: மணிபூரக சக்கரத்தில் இருந்து எழும் ஆன்ம ஜோதியின் சிகரத்தின்மேல் மனத்தை அசைவற்று நிறுத்தி தியானிக்க, பூரண ஜோதி நம்முள் இடையறாது அவை பற்றிப் பிரகாசிக்கும்.*

*குறள் 288: அடைத்திட்ட வாசலின் மேன்மனம் வைத்துப்*
*படைத்தவன் தன்னையே பார்.*

*பொருள்: மூடியிருக்கும் இதயக் குகையின் வாசலின் மேல் அசைவற்ற மனத்தை நிறுத்தி தன்னைப் பூர்ணமாக*

*பரமார்த்த அகண்டமான, இடைக்கூறு இல்லாத ஒன்றாய்ப் பார்.*

*[படைத்தவன் என்னும் சொல் இங்கே விழிப்பு நிலையில் உள்ள மனிதர்களைக் குறிக்கிறது.]*

*குறள் 289: அறுபதொ டாறு வருட மிதனை*
*உறுதிய தாக யுணர்.*

*பொருள்: இக்குறள் தந்திர சாஸ்திரத்தை முறையோடு முற்றிலுமாய்ப் பயில்வதைக் குறிக்கிறது.*

*சந்திர கலைகள் பதினாறையும் அவற்றை முற்றிலும் உணர்ந்து அகமுகப் படுத்தலையும் ஓர் ஆண்டு அளவில் பயின்ற அனுபவத்தைக் கொண்டு வர வேண்டும்.*

*குறள் 290: அட்டமா சித்தி யடையுமோ ராண்டினில்*
*இட்ட மிதனைத் தெளி.*

*பொருள்: இங்ஙனம் மேற்கண்ட மெய் நெறியில் கூறப்பட்ட கருத்துக்களையும் வழிமுறைகளையும் முறையாக இடையறாது பயின்றுவர ஓராண்டு காலத்திலேயே அஷ்டமா சித்திகளும் கைவரப் பெறும்.*

**ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை**
**தகவல் மற்றும் தொடர்புக்கு**

For Website: https://www.gururamana.org

For Accommodation: https://stay.gururamana.org

For Parayana: https://parayana.gururamana.org

For Search: https://search.gururamana.org



*சஹாயவல்லி சமேத பூமிநாதஸ்வாமி ஆலயம், திருச்சுழி*




*பகவான் ரமண மகரிஷிகள் அவதரித்த இல்லம், சுந்தர மந்திரம், திருச்சுழி*

# திருச்சுழி

*['சத்குரு ஸ்ரீ ரமண மஹரிஷி சரிதமும் உபதேசமும்' நூலிலிருந்து இக்கட்டுரை இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளது.]*

***"ஏதவன் ஊர் யார் உற்றார் யார் அயலார்"***

***(மாணிக்கவாசகர், திருவெம்பாவை)***

*சுமார் 120 ஆண்டுகளுக்கு முன் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த, ஆலவாய், வெள்ளியம்பலம் போன்ற பல பெயர்களைக் கொண்ட மதுரை நகரத்திலிருந்து ஒருவன், தெற்கு நோக்கிப் பயணம் செய்ய வேண்டுமெனில் கரடுமுரடான பாதையில் செல்ல வேண்டும். செல்லும் வழியில் பல கண்மாய்களையும், சிற்றாறுகளையும் அவன் காண்பான். ஆங்காங்கே விளைநிலங்களில் பருத்தியும் நெற்பயிர்களும் தலையசைத்து அவனை வரவேற்கும். இப்பயிர்களுக்குத் தெம்மாங்கு பாடிக்கொண்டு இடையில் மானத்திற்கு ஒரு கோவணம் என்னும் ஒருமை ஆடை மட்டுமே அணிந்து வறுமையின் அடித்தளத்தில் வாழ்ந்து ஏற்றம் இறைத்து நீர் பாய்ச்சும் விவசாயிகளையும் காண்பான்.*

*மேலும் அவன் தன் பயணத்தைத் தொடருவானாகில் வானம் பார்த்த பூமி மழையின்மையால் வெறுமை கானம் பாடிக் கொண்டிருப்பதை நோக்குவான். இவ்வாறு பல பட்டி தொட்டிகளைக் கடந்து செல்லுங்கால் இடையில் அவன் திருச்சுழி என்ற கிராமத்தை அடைவான்.*

*தமிழ் வளர்த்த மூன்றாம் சங்கத்தின் இருப்பிடமான ஆலவாயைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய பாண்டி நாட்டில் பதினான்கு சிவத்தலங்கள் உள்ளன. இவற்றைப்*

பாண்டிப் பதினான்கு என்றழைப்பர். மதுரை, ராமேசுவரம், பிரான்மலை போன்ற பதினான்கில் பத்தாவதாக பதியப்பட்டுள்ளது திருச்சுழியம்பதியாகும். இத்தலத்திற்குத் திருச்சுழியல், சுழிகை, சுழிகைபுரி, முத்திபுரம், முத்திநகர், சூலபுரம், சூலநகர், திருசூலபுரம், வயலூர், அரசவனம், ஆவர்த்தபுரி போன்ற பல பெயர்கள் உள்ளன.

பற்பல சமயங்களில் வெள்ளத்தினால் இவ்வூர் துன்பத்தில் தள்ளப்பட்டபோது கங்கை த(ா)ங்கும் கடவுளராம் சிவபெருமான் இதனைக் காத்தருளினார். இவ்வாறு ஒரு பிரளய காலத்தில் இவ்வூர் நீரில் மூழ்கியபோது இறைவன் தன் திரிசூலத்தை பூமியில் நாட்ட ஆங்கொரு பெருங்குழி ஏற்பட்டு, வெள்ள நீர் முழுவதும் அக்குழியின் வழியே சுழித்திக்கொண்டு பூமிக்குள் சென்றிட, அங்கு சுழி ஏற்பட்டதால் இவ்வூருக்குத் திருச்சுழியல் என்ற பெயர் ஏற்பட்டது.

பிறிதொரு சமயத்தில் இதனைக் காக்க சிவபெருமான் தன் திரிசூலத்தை ஏந்தியதால், இதற்குத் திரிசூலம் என்ற பெயர் தோன்றியது. ஆரியத்தில் இத்தலத்தைத் திரிசூலம் என்றே அழைத்தனர்.

ஒரு சமயம் புனிதமிக்க பூமிதேவியானவள் இரண்யாக்ஷன் என்ற அரக்கனால் கவரப்பட்டு கடலுக்கு அடியில் கொண்டு செல்லப்பட்டபொழுது திருமால் வராக அவதாரம் எடுத்து அவளைக் காப்பாற்றினார். பூமி தேவியானவள், அவ்வரக்கனால் தீண்டப்பட்ட பழி நீங்கிப் பரிசுத்தமடையும் பொருட்டு பார்வதிநாதனை பக்தியுடன் வேண்ட, அவரால் திருச்சுழித் தலத்திற்கு அனுப்பப்பட்டு தவமியற்றி மாசு நீங்கப் பெற்றாள். இதன்பொருட்டு இங்கு இறைவனுக்கு பூமிநாதன், பூமீசர், திருமேனிநாதர், புவனேசர், தாணுநாதர், பிரளயவிடங்கர், சுழிகேசர் போன்ற பல பெயர்களமைந்து இத்தலமும் பூமிநாத க்ஷேத்திரம் என்று வழங்கப்படுகின்றது.

*இந்திரனின் வஞ்சனையால் கல்லாகப் போகும் படியான சாபத்தைப் பெற்ற கௌதமரின் மனைவி அகலிகை, ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் பாதத் தூளியால் பரிசுத்தமானாள். புத்தி தடுமாறி அப்பாவியான அகலிகையைச் சபித்த கௌதமரும் தன் தவற்றை உணர இறைவனால் இத்திருச்சுழியல் தலத்திற்கு அனுப்பப்பட்டு இங்கு கடுந்தவம் இயற்றி வந்தார். ஒரு மார்கழி மாத திருவாதிரையும் நிறைமதியும் இணைந்து நின்ற இனிய நாளில் கயிலைநாதனின் கவின்மிகு தாண்டவங் கண்டு மனைவியைச் சபித்த பாவம் பறந்தோட தேற்றம் நீங்கி தெளிவு பெற்றார். அதன் பின்னர் அகலிகையும் இறைவனால் இத்தலத்திற்கே அனுப்பப்பட்டு மலைமகள் பாகனின் மணக்கோலத்தை மீண்டும் இருவரும் சேர்ந்து தரிசித்து தங்கள் தவத்தைத் தொடர்ந்தனர். கௌதமருக்குத் திருமணக்கோலக் காட்சியை அளித்ததால் இறைவன் மணக்கோலநாதர் என்றும், தேவியானவள் துணைமாலை நாயகி, சகாயவல்லி போன்ற பெயர்களாலும் அழைக்கப் படுகின்றனர்.*

*கௌண்டின்யர் என்ற முனிவர் தவமியற்றுவதற்கு உதவியாக இங்கு ஒரு சிற்றாறு உண்டாயிற்று. இதற்கு கௌண்டின்ய ஆறு என்று பெயர். இதுவே பின் மருவி குண்டாறு என்று பெயர் பெற்றது. இக்கிராமத்தின் வடபுறத்தில் இவ்வாறு ஓடுகின்றது. தென்புறத்தில் ஒரு பெரிய ஏரி உள்ளது. இதன் நீளம் சுமார் மூன்று மைல்கள். இது இவ்வூரின் மட்டத்திலிருந்து ஏற்றத்தில் அமைந்திருப்பினும், இவ்வேரியில் நீர் நிரம்பி வழியுங்கால் வெள்ளம் இவ்வூருக்கப்பால் செல்லுமேயன்றி, திருச்சுழியைப் பாதிப்பதில்லை.*

*பாண்டிய மன்னன் பராக்கிரமன், தன்னைத் தொடர்ந்து பீடித்து வந்த பிரம்மஹத்தி பாவத்தை இவ்வாற்றில் மூழ்கிப் போக்கியதால் இவ்வாற்றிற்கு*

பாபஹரிணி அல்லது பாவஹரி என்ற பெயரும் நிலவியது என்பர்.

பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்குட்பட்ட மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி பகுதிகளில் இவ்வூர் அடங்கும். இவ்வூரின் வடபுறம் கௌண்டின்ய ஆறு ஓடுகின்றது என்பதை முன்னரே கூறியிருந்தோம். எட்டுக் குளங்களும், எட்டு லிங்கங்களும் கொண்ட திருச்சுழி எல்லை நான்கு தீர்த்தங்களால் பின்பு வரையறுக்கப்பட்டது.

இத்தல தீர்த்தங்களில் ஒன்றான கௌவைக்கடல், சுந்தரர் இயற்றிய திருப்பதிகத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. சுந்தரர், மாணிக்கவாசகர், இராமலிங்க அடிகளார் போன்ற அடியார்களால் பாடல் பெற்ற தலம் திருச்சுழி. பெரிய புராணத்திலும் இதைப்பற்றிக் குறிப்புகள் காணப் படுகின்றன. திருச்சுழியலைப் பற்றி ஏழு நூல்கள் இதுகாறும் இயற்றப் பெற்றுள்ளன. பாண்டிய மன்னர்களின் ஆட்சியின் கீழிருந்த இவ்வூர், பின்பு ராமநாதசேதுபதி மன்னர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. திருச்சுழியற் பதிகத்தில் சுந்தரர் இறைவனை இவ்வாறு புகழ்கிறார்:

உடல்களாய் அவற்றில் புகும் உயிர்களாய் அகன்ற நிலமாய், வானமாய் அறிவாய் விளங்கும் சிவபிரான் எழுந்தருளியிருக்கும் இடம் திருச்சுழியலாகும்! அவரைத் தியானித்துப் போற்றுபவர்களை கூற்றுவனுடைய ஏவலர் துன்புறுத்த மாட்டார்; இத்தலத்தில் தங்கித் தொண்டு செய்பவர் துன்பத்தை ஒழிப்பர்; அப்பெருமானது திருவடிகளைத் தொழுபவர் அந்தந்தத் திசைகளுக்குத் தலைவராவர்; அவர்களை விட்டுத் திருமகள் பிரியாள்; அவரை வணங்குபவர் இவ் வுலகில் புகழ் எய்தி வானுலகு அடைவர்;

அப்பெருமானைப் போற்றி வழிபடுவதனால் புகழ் மற்றும் சிறந்த தவநெறி கிட்டும்; சிவபெருமானை

*வணங்குபவர்களுக்கு வினைகள் எளிதில் நீங்கும்; அயனும் மாலும் அப்பெருமானது திருவடி, திருமுடிகளைக் காண மாட்டார்கள். புத்தர்களும் சமணர்களும் அவரது பெருமையை உணர மாட்டார்கள். இராவணனை அடர்த்த அப்பெருமானது திருச்சுழியல் பதிகத்தை ஓதி உணர்பவர்கள் துன்பமடையார்.*

*திருமேனிநாதரின் திருக்கோயில் பாண்டிய மன்னரால் கட்டப்பெற்று பின்னர் சேதுபதி மன்னர்களால் புதுப்பிக்கப் பெற்றிருக்க வேண்டும். பல கல்வெட்டுக்கள் சேதமடைந்து உள்ளதால் இவைகளிலிருந்து யாதொரு செய்தியும் கிடைக்கப் பெறவில்லை.*

*இவைபோன்ற இன்னும் பல பெருமைகள் பெற்ற திருச்சுழி சென்ற நூற்றாண்டின் இறுதியில் எவ்வாறு இருந்திருக்கும் என்று அறியும் ஆர்வம் நமக்கிருப்பது இயல்பே! ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் 1879இல் இவ்வூர் சுமார் 500 வீடுகள் கொண்ட அமைதியான கிராமமாயிருந்தது. திருமேனிநாதர் கோயிலைச் சுற்றியே பெரும்பாலும் அதன் வாழ்வு அமைந்திருந்தது. மதுரையினின்று இராமேச்வரத்திற்குச் செல்லும் வழிப்போக்கர் இங்குள்ள தருமசத்திரத்தில் தங்கிச் செல்வர். இது இராமநாதபுரம் ஜமீனில் ஒரு தாலூகாவின் தலைமையூர். இனி இவ்வூரைச் சுற்றிப் பார்ப்போம்*

*அருகிலுள்ள கிராமங்கள் உள்ளடங்கிய தாலுக்காவுக்கு திருச்சுழி தலைமையிடமாக விளங்கியதால் அங்கு ஒரு சிறிய அரசு மருத்துவமனையும், நீதிமன்றமும், காவல் நிலையமும், உதவிப் பதிவாளர் அலுவலகமும் உள்ளது. இந்த நீதிமன்றத்தில் வழக்காடுவதற்குப் பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞர்கள் இருந்தனர். இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களால் நடத்தப் பெற்ற சேதுபதி ஆரம்பப் பள்ளியும் கொண்டதாக விளங்கியது. திருச்சுழி மதுரையிலிருந்து நாற்பத்தெட்டு கிலோ மீட்டர்*

தூரத்திலும் (முப்பது மைல்கள்) விருதுநகரிலிருந்து முப்பது கிலோ மீட்டர் (பதினெட்டு மைல்கள்) தூரத்திலும் அமைந்துள்ளது. அக்காலத்தில் திருச்சுழிக்குச் செல்வதற்கு விருதுநகர் இரயில் நிலையமே அருகில் இருந்தது. எனவே அரசியல்வாதிகளும் யாத்ரீகர்களும் அங்கே போவதில்லை. அவ்வளவு ஏன் புனித யாத்திரை செல்பவர்களும் நாடோடி சாதுக்களும்கூட எப்பொழுதாவதுதான் அங்கே போவார்கள். ஆனால் மதுரையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் யாத்ரீகர்கள் திருச்சுழிக்கு வந்து தங்கிப் போவது வழக்கம். ஏனெனில் திருச்சுழியை விட்டால் அருகில் பெரிய கோயிலோ சத்திரமோ கிடையாது. சென்ற நூற்றாண்டில் அதாவது 1902ஆம் வருடத்தில்தான் தென்னிந்திய ரயில்வே கம்பெனி மதுரை ராமேஸ்வரம் இரயில் பாதையை அமைத்தது. எனவே யாத்ரீகர்கள் வருவதும் நின்று போயிற்று.

‘இட்டார் பெரியோர் இடாதோர் சிறியோர் பட்டாங்கில் உள்ளபடி’ என்று சான்றோர் கூறியிருப்பினும் செல்வத்தால் வலியவர், வறுமையினர் என இரு திறத்தாரே இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவில் இருந்தனர். இவர்களுக்கு இடையே இடைவெளி அதிகமாக இருந்தது. இதனைக் கருதியே பல ஆன்மீகப் பெரியோர்கள் அதிமுயற்சி எடுத்து வறுமையைப் போக்க முயன்றனர்.

ஆலவாய் நகரும் அதைச் சுற்றியுள்ள பகுதியும் இயல்பாகவே வறட்சிப் பகுதியாதலால் ஏழை செல்வந்தர் வேற்றுமை மிக அதிகமாக இருந்தது. தேசத்தந்தை மகாத்மா காந்தி மதுரைப்பகுதி மக்கள் மேலாடை அணிய இயலாத நிலையில் இருப்பதைக் கண்டு, அன்றைய தினமே தான் மேலாடை அணிவதைத் துறந்தார் எனக் கூறுவதுண்டு. இப்படி அன்றாடங் காய்ச்சிகளாக வாழ்ந்த மக்களின் நிலையை

*என் சொல்வது! வாரம் ஒருமுறை கிராமத்தில் சந்தை கூடும். அதில் பருப்பு வகைகள், தானியங்கள், ஆடைகள், சமையலுக்குத் தேவையான பொருட்கள் என அன்றாட வாழ்க்கைக்கு அவசியமானவைகள் கிடைக்கும். இச்சந்தையிலேயே பெரும்பாலும் விவசாயி, ஏழைகளின் தேவைகள் நிறைவேறி விடும். செல்வந்தர்களின் வீடுதேடி பொருட்கள் வரும். ஏனைய பொருட்களை அவ்வப்போது, அருகிலுள்ள நகரத்திற்குச் சென்று வாங்கி வருவர்.*

*அக்கால மக்களின் தேவைகள் சிறிதே. போக்குவரத்து வசதி போதுமான அளவிற்கு இல்லாத காரணத்தால் பெரும்பாலான மக்கள் தத்தம் இடத்தை விட்டு அகலாமல் தோன்றிய இடத்திலேயே தொடர்ந்து வாழ்ந்து வானெய்தினர். இயற்கையையொட்டியே வாழ்க்கை நடத்தினர். செல்வந்தர்கள் பலரும் போலி வாழ்க்கை வாழாமல் அமைதியான வாழ்க்கை வாழ்ந்தனர். அவர்களின் ஆசை அளவாக இருந்ததால் தேவையும் சிறிதாகவே இருந்தது.*

*ஆனால் ஒரு ஒற்றுமையை எக்காலத்திலும் காணலாம். அது ஆன்மீக நாட்டம் கொண்டவர் அரிதாயிருப்பதே.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2025

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *ஜூலை* | 10 | *வியாழன்* | *காலை 11:35* | 11 | *வெள்ளி* | *மதியம் 1:13* |
| *ஆகஸ்ட்* | 8 | *வெள்ளி* | *மதியம் 2:12* | 9 | *சனி* | *மதியம் 1:24* |
| *செப்டம்பர்* | 7 | *ஞாயிறு* | *அதிகாலை 1:47* | 7 | *ஞாயிறு* | *நள்ளிரவு 8:37* |
| *அக்டோபர்* | 6 | *திங்கள்* | *மதியம் 12:23* | 7 | *செவ்வாய்* | *காலை 9:20* |
| *நவம்பர்* | 4 | *செவ்வாய்* | *இரவு 10:40* | 5 | *புதன்* | *மாலை 6:48* |
| *டிசம்பர்* | 4 | *வியாழன்* | *காலை 8:35* | 5 | *வெள்ளி* | *அதிகாலை 4:45* |



# ரமண புராணம்

## ஆகுரா

## தொடர் விளக்கம்

## ரமண புராணம் வரிகள் (119–130)

*அன்னியங்கள் யாவும் மெய்ஞ்ஞானான்ம சொரூபமாம் 119*
*தன்னிலே கற்பனையாம் தற்பரன் தாள் வாழ்க; 120*
*தெய்வச் சுழியர் சிவபுரத்து சீர் விளக்கும்*
*சைவப் பெருமான் சரணமலர் வாழ்க;*
*பிறையொடு தன் சென்னி பிறங்கக் கடல்வாய்க்*
*கறை விடம் நன்குண்ட களத்தோன் தாள் வாழ்க;*
*பழவாதனையைப் பரிசறச்செற்றென்னை*
*விழைவாக ஆண்ட விநோதன் அடி வெல்க; 126*
*கெடுத்தலரு வல்வினையைக் கீண்டு பூண்டோடே*
*அடர்த்தலரு முட்பகையும் அட்டோன் அடிவெல்க;*
*ஆணவராகத்தோடு அருவருப்பும் தானகன்று*
*பூணவராம் மெய்யிற் புனைந்தோன் அடிவெல்க; 130*

*** *** ***

*அன்னியங்கள் யாவும் மெய்ஞ்ஞானான்ம சொரூபமாம் 119*
*தன்னிலே கற்பனையாம் தற்பரன் தாள் வாழ்க 120*

பதவுரை:

*அன்னியங்கள் யாவும்* – தான் அல்லாத மற்றவை அனைத்தும் அந்நியமாக பாவிக்கப்படுகிறது. தான் என்பது ஒருவரின் இயல்பான இரண்டற்ற ஆன்ம நிலை

*மெய்ஞ் ஞானான்ம சொரூபமாம்* – மெய் அறிவாகிய ஆன்மா, எல்லை அற்ற ஆனந்த வடிவம். உண்மையில் வடிவம் அற்றது. வடிவம் என்றால் எல்லைக்கு உட்பட்டது

*தன்னிலே* – ஆன்மாவினின்று எழும்; *கற்பனையாம்* – கற்பனையாகும். தோன்றி மறையக் கூடிய அனைத்தும் கற்பனைத் தோற்றங்கள்

*தற்பரன் – தத் பரன். தத் என்பது சமஸ்கிருத வார்த்தை. தத் என்றால் ஆன்மீகத்தில் அது என்பதாகக் குறிக்கப்படுகிறது*

***விரிவான விளக்கம்:***

*உலகியலில், பெயருடனோ உருவமுடனோ காணப்படும் எல்லாவற்றிற்கும் ஆதார அடிப்படையாக மெய்ப்பொருள் ஒன்று உள்ளது என்பது, எல்லா உபநிடதங்களின் கூற்று. அது பெயர் உருவம் என்ற வரையறுப்புகளை மீறியது. அதனால் அதை 'அது' (வடமொழியில் தத்) என்று மட்டுமே அல்லது 'பிரம்மம்' என்றே உபநிடதங்கள் குறிக்கின்றன.*

*அது என்றால் எது? எதையெல்லாம் எது என்று கேட்கப்படுகிறதோ அது எல்லாம் அதுவே (ஏகன் அனேகன்).*

*"ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்*
*போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்"*

*என்பது சிவபுராண வரிகள்.*

*தன்னில் இருந்து தோற்றுவித்து, காத்து பின்னர் மீண்டும் தன்னிலே ஒடுங்கச் செய்தல். தோற்றம் மறைவு அனைத்துமாய் அதுவே. பரன் ஆன்மா. "பர" (Para) மற்றும் "அபர" (Apara) ஆகியவை சமஸ்கிருத வார்த்தைகள். "பர" என்றால் உயர்ந்த, மேலான அல்லது பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டது என்று பொருள். "அபர" என்றால் தாழ்வான, கீழான அல்லது பிரபஞ்சத்திற்கு உட்பட்டது என்று பொருள். ஆன்மீகப் பார்வையில், இவை அறிவின் இரண்டு நிலைகளைக் குறிக்கின்றன: பரா வித்யா என்பது பிரம்மம் அல்லது இறைவனைப் பற்றிய உயர்ந்த அறிவு, அபர வித்யா என்பது உலகியல் அறிவு.*

*பர: இது பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்ட, நித்தியமான, மாற்றமில்லாத அறிவைக் குறிக்கிறது. இது இறைவனின் தன்மை, ஆன்மாவின் உண்மை போன்றவற்றை*

உள்ளடக்கியது. இது அனுபவபூர்வமான, புலன்களுக்கு அப்பாற்பட்ட அறிவாகும்.

அபர: இது உலகியல் அறிவு, புலன்களால் அறியப்படும் விஷயங்கள், அனுபவங்கள், போன்றவற்றை குறிக்கிறது. இது உலகியல் அறிவையும், அனுபவங்களையும் உள்ளடக்கியது.

**விரிவான விளக்கம்:**

இங்கு பகவான் நமக்கு அருளிய 'உள்ளது நாற்பது' எனும் உபதேச நூலின் முதல் மங்கல வெண்பா நினைவு கூறத்தக்கது. அதில் 'உள்ளது' அல்லது 'உள்ள உணர்வு உள்ளதோ' என்று வரும். அறிவு என்று உண்டு என்றால் அது மெய்யறிவு மட்டுமே. அதனை விடுத்து அதனை அறியவோ அல்லது வேறு பயன்பாட்டுக்கோ வேறு அறிவு உள்ளதா என்றால் இல்லை என்பதே பதிலாகும். மெய்யறிவையே ஆன்மா அல்லது உள்ள பொருள் என்று கூறப்படுகிறது. ஆன்மா எல்லையற்றது. எண்ணங்களுக்கு எட்டாதது. இரண்டற்ற இயல்பு நிலை. அதுவே மெய்ஞ்ஞானான்ம சொரூபம். காண்பரியப் பேரொளி.

மெய் சொரூபம் என்றால் எங்கும் பரந்து எல்லையற்று காணுதற்கு எட்டாத அரூப நிலை. இந்த மெய் ஞானமே மெய் அறிவு என்றும் மெய் உணர்வு என்றும் அறியப்படுகிறது. மெய்யறிவுக்கு வேறாக எதுவமே இல்லை. அப்படி வேறாக விளங்கும் அனைத்தும் அன்னியங்களே (அகந்தை). ஏகவஸ்து அனேகங்களாய் காணப்படுவது. அனைத்தும் மெய் அல்ல. இவை பொய் அறிவின் தோற்றங்கள் அன்னியமாம் மாய விஷயங்கள். ஆன்மாவினினின்று எழுகின்ற கற்பனைகள். அரையிருட்டில் கயிறு பாம்பு போல மன மயக்கத்தால் காட்சி தருவது போன்றது. பாம்பின் மாயத்தோற்றம் கயிறிலிருந்தே எழுகிறது. இதில் மெய் கயிறு, பாம்பு பொய். அதுபோன்றே ஆன்மா மெய். ஆன்மாவினின்று தோற்றமாக எழுவதே

அதற்கு அன்னியமான அனைத்தும். தோன்றும் அன்னியம் அனைத்தும் மீண்டும் ஆத்மாவிலேயே ஒடுங்க வேண்டும். ஏகன் அனேகன் – மீண்டும் அனேகன் ஏகன் ஆவது. ஆக அனைத்தும் ஆகிய அந்த தற்பரனின் திருவடிகள் வாழ்க.

"எல்லா உயிர்களில் ஒத்து ஏகனாய் நாசமுறும்
எல்லாவற்றும் பொன்றாது ஏய்ந்தோனாய்"

(பகவத் கீதாசாரம் சுலோகம் 15)

சகல உயிர்களில் உள்ளும், இசைந்து ஒரே சொரூபனாய், தோன்றி அழியக்கூடிய எல்லாவற்றும் பொருந்தியிருந்தும் தான் அழிவற்றவனாய் உள்ளவன் பரமேஸ்வரன். அவன் பார்ப்பதற்கு அரியவன். தற்பரன் என்பது தன்னிலே அனைத்தையும், அவனுக்கு அன்னியமானவைகளையும் உள்ளடக்கிய சத்திய வஸ்து. காணும் கனவாகவும், விழிக்கும் நனவாகவும், கவர்ந்திழுக்கும் தூக்கமாகவும் காணக்கூடிய மனோமய உலகமானது மறையக்கூடியது. அதீத துரிய வெளியாகிய இதயத்தில், தூய பர வெளியாக வியாபிக்கும் ஒளி மயமான உண்மை விழிப்பாகிய சுழித்தியே உள்ளது. அந்த உள்ள வஸ்துவானவனே தற்பரன், அத்தகைய தற்பரனின் தாள் வாழ்க.

தெய்வச் சுழியர் சிவபுரத்துச் சீர் விளக்கும்
சைவப் பெருமான் சரணமலர் வாழ்க 122

பதவுரை:

தெய்வச் சுழியர் சிவபுரம் – திருச்சுழி என்ற சிவத்தலம்; சீர் விளக்கும் – பெருமையை விளக்கும்

சைவப் பெருமான் – சைவ வழிபாடு செய்யப்படும் சிவபெருமான்

சரண மலர் வாழ்க – சரணம் அடையவேண்டிய பாத மலர் வாழ்க. முன்பே மலர்த் தாளுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. நடராஜரின் பாதம் முகிலகன்

என்னும் அரக்கனை மிதித்து நடனம் ஆடினாலும் முகிலகன் சிரித்த வண்ணம் தலை தூக்கி நிமிர்ந்தே கிடப்பான். காரணம் மிதிப்பட்டாலும் மிதிக்கும் பாதங்கள் மலர் போன்றவை.

திருச்சுழி

இந்தத் தலம் பாண்டிய நாட்டு தேவார பாடல் பெற்ற சிவத்தலங்களில் ஒன்று. ஒரு பிரளய காலத்தில் நீரில் மூழ்கியபோது, சிவபெருமான் தனது சூலத்தை பூமியில் நாட்டினார். ஆங்கு ஒரு பெரும் குழி தோன்றியது. வெள்ள நீர் அனைத்தும் அக்குழியில் சுழித்துக்கொண்டு பூமிக்குள் சென்று விட்டது. அன்று இவ்வூர் காப்பாற்றப்பட்டது. அதனால் இந்த ஊருக்கு திருச்சுழியல் என்ற பெயர் ஏற்பட்டது. கவுதமர் தன் மனைவி அகலிகையை சபித்த பாவம் நீங்க இத்தலத்தில் தவம் இயற்றினார். பாவம் நீங்கப்பட்டு இருவரும் பார்வதியும் சிவனும் திருமணக்கோல காட்சி தந்த இடம் என்பதால் இறைவன் மணக்கோலநாதர் என்றும் தேவி துணைமாலை நாயகி என்றும் சகாயவல்லி என்றும் அழைக்கப் படுகின்றனர். திரிசூலபுரம் என்னும் திருச்சுழியை பொங்கும் புவி என்று சொல்லப்படுகிறது. மாசி மகத்தன்று பூமிநாதேஸ்வரர் ஆலயத்தின் முன் உள்ள சூல தீர்த்தத்தில் தீர்த்தம் பொங்கி வருவதனால் பொங்கும் புவி என்று கூறப்படுகிறது. இன்னும் பலவாறு இந்த தலம் சிறப்புகள் பலபெற்று உள்ளது.

இத்தகைய சிவத் திருத்தலத்தின் பெருமைகள் உலகு அறியும். மேலும் சிறப்பு விளங்கும் வண்ணம் இந்த தலத்தில் அவதரித்த சைவப் பெருமான் பகவான் ரமண மகரிஷிகள் ஆவார். அவரது சரணம் அடையத்தக்க மலர் போன்ற பாதங்கள் வாழ்க.

பிறையொடு தன் சென்னி பிறங்கக் கடல்வாய்க்
கறை விடம் நன்குண்ட களத்தோன் தாள் வாழ்க 124

*பதவுரை*

*பிறையொடு – சந்திரப் பிறையுடன் (சந்திரக் கலை)*

*தன் சென்னி – தனது தலை, நீண்ட சடை முடியுடன் கூடிய*

*பிறங்க – ஒளிர, பிரகாசிக்க*

*கடல் வாய் – கடல் வழியாக, கடலினிடம் இருந்து பெறப்பட்ட*

*கறை விடம் – மாசுபடிந்த நஞ்சு;*

*நன்கு உண்ட – நன்றாக உண்ட. நஞ்சே ஆயினும் அதை சுத்தமாக கொஞ்சமும் விட்டு வைக்காது தீர உண்டவிதம் கூறப்படுகிறது. எனவே, 'கடல் வாய் விடம் உண்ட' என்பது சிவபெருமானின் வீரத்தையும், உலகைக் காக்கும் அவருடைய ஆற்றலையும் குறிக்கும் ஒரு சொற் தொடராகும்*

*களத்தோன் – கண்டத்தோன்.*

*விரிவான விளக்கம்:*

*சிவபெருமான் தனது நீண்ட சடை முடியுடன் கூடிய சிரத்தில் சந்திரக் கலை ஒளி வீச காட்சி கொடுப்பவன். தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெற வேண்டி பாற்கடலைக் கடைந்தபோது, வாசுகி பாம்பின் வாயிலிருந்து வெளிப்பட்ட விஷம் மற்றும் பாற்கடலில் இருந்தும் வெளிப்பட்ட விஷம் ஆகிய இரண்டும் சேர்ந்து ஆலகால விஷம் ஆனது.*

*விஷத்திடம் இருந்து உலகைக் காக்க சிவபெருமான் அந்த கறை படிந்த ஆலகால விஷத்தை கொஞ்சமும் மீதம் இன்றி உண்டார். உமையவள் தனது திருக்கரம் கொண்டு விழுங்கப்பட்ட விடம் மேலும் உள்ளே செல்லாது தடுத்து சிவபெருமானின் கண்டத்திலேயே நிறுத்தி அமுதாக்கினாள். அத்தகைய திருநீலகண்டனாகிய சிவபெருமானின் திருவடிகள் வாழ்க!*

*'கறை' என்ற சொல், ஒரு பொருளின் மீது படிந்திருக்கும் நிறமாற்றம் அல்லது கசடு போன்றவற்றைக் குறிக்கும். இது ஒரு மேற்பரப்பில் உள்ள அழுக்கு அல்லது கசடு போன்ற எதார்த்தமான பொருளாக இருக்கலாம். 'விடம்' என்ற சொல் பொதுவாக நச்சுத்தன்மை அல்லது விஷத்தைக் குறிக்கிறது. எனவே, 'கறை விடம்' என்பது, ஒரு பொருளின் மீது படிந்துள்ள நச்சுத்தன்மை அல்லது மாசு படிந்த விஷம் எனப் பொருள்படும். இங்கு சிவபெருமானின் கண்டத்தில் தங்கிய நீல நிறம் படர்ந்த மாசு படிந்த நஞ்சு. 'கடல்' என்றால் கடல், 'வாய்' என்றால் வாய், 'விடம்' என்றால் விஷம். எனவே, 'கடல் வாய் விடம்' என்பது 'கடல் பாம்புகளின் விஷம்' அல்லது 'கடலில் வாழும் பாம்புகளின் விஷம்' என்று பொருள்படும்.*

*"கருவினைக், கடல் வாய் விடம் உண்ட எம்*
*திருவினை, திரு அண்ணாமலையனை,*
*உருவினை, உணரார் புரம் மூன்று எய்த*
*அருவினை, அடியேன் மறந்து உய்வனோ?"*

*தேவாரம் பாடல் 1109 5.4, (திருஅண்ணாமலை*
*திருக்குறுந்தொகை அப்பர் சுவாமிகள்)*

*பழவாதனையைப் பரிசறச்செற்றென்னை*
*விழைவாக ஆண்ட விநோதன் அடி வெல்க 126*

**பதவுரையுடன் விளக்கம்:**

*பழ வாதனை – பழைய வாசனைகள், பழைய வினைகள் துன்பங்கள் பரிசு அற. பலன் கிடைக்காது விளைவுகளை தடுப்பது*

*செற்று – நெருக்கம்*

*விழைவாக – விருப்பமாக*

*வினோதன் – வினோதன் என்ற பெயர், சமஸ்கிருத வார்த்தையான 'வினோத' என்பதிலிருந்து பெறப்பட்டது, இதன் பொருள் 'மகிழ்ச்சி' அல்லது*

'உற்சாகம்' ஆகும். எனவே, வினோதன் என்ற பெயர், மகிழ்ச்சியை விரும்புபவர், உற்சாகமானவர், அல்லது ஏதாவது ஒரு செயலில் ஈடுபட்டு அதில் மகிழ்ச்சி காண்பவர் போன்ற அர்த்தங்களைக் குறிக்கிறது. மிகுந்த நெருக்கமான அன்போடு அன்பர்களின் பண்டைய வினை முழுதும், அதற்கான விளைவுகளை பெறாது தடுத்தாட்கொண்ட, வினோதனின் பாதங்கள் வெல்க.

கெடுத்தலரு வல்வினையைக் கீண்டு பூண்டோடே
அடர்த்தலரு முட்பகையும் அட்டோன் அடிவெல்க 128

பதவுரை

கெடுத்து அலரும் – கெடுத்து விரியும்

வல்வினை (வலிய வினை) – கொடிய வினை ஊழ்வினை (விடாது போய் பற்றும் விதியின் விளைவு)

கீண்டு – என்றால் பிடுங்குதல் அல்லது தோண்டி எடுப்பது

பூண்டோடு – 'பூண்டோடு' என்றால் வேர்களுடன் சேர்த்து;

அடர்த்து அலரும் – நெருக்கமாக மலரும், 'செறிவாக மலரும்' என்று பொருள் கொள்ளலாம்.

உட்பகை – ஒருவரது உள்ளத்தில் எழும் பகை. இவை ஆறு வகையாகக் கூறப்படுகிறது.

அட்டோன் – அட்டவன் என்றால் அழித்தவன்.

விரிவாக்கம்:

அலரும் – பொதுவாக ஒரு மலரின் நிலையைக் குறிக்கும். மனித நிலைகள், குழந்தை வாலிபம் முதுமை என்று பல நிலைகள் கூறப்படும். அதுபோல மலர்களும் ஏழு நிலைகள் கூறப்படும். அவை அரும்பு, மொக்கு, முகை, மலர், அலர், வாடி வீழ்ந்த நிலை மற்றும் செம்மல் என்னும் வதங்கிய நிலை; அலர் – ஐந்தாம் நிலையோ மிக அழகிய மலர்ந்த நிலை ஆகும். (எ.கா) 'அன்றலர்ந்த மலர் போல'. பூத்தலின் முதிர்ந்த, முழுமை நிலையில்

*உள்ள மலர் அலர் எனப்படுகிறது. எனவே அலர்தல் என்பது முழுவதுமாய் முதிர்ந்து விரிதலைக் குறிக்கிறது.*

***கர்ம வாசனை:***

*வல்வினை கெடுத்து அலரும். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கோவலனுக்கு நேர்ந்ததை விவரிக்க, 'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டலால்' என்கிறார்.*

*ரமண புராணத்தில் பிறிதோர் இடத்தில் 'விடாது போய் பற்றும் விதியின் விளைவு' என்று கூறப்படுகிறது. இங்கு வல்வினை கெடுத்து அலரும் எனப்படுகிறது. வினைகள் இரண்டு கூறாக விரிவாக்கம் பெறுகிறது. ஒன்று அதன் விளைவு. அது நன்மை தீமைகள் என்பதாக அனுபவித்து தீர்த்தல். மற்றது அந்த விளைவுகளால் கருத்தரிக்கும் வாசனைகள். வாசனைகள் அழிந்தால் தான் மீண்டும் வினைகள் ஆற்றாமல் வீடுபேறு அடைய வழி கிடைக்கும். இவ்வாறு வல்வினை மிச்சம் மிகுதி இல்லாமல் வேரோடு அழிக்க பட வேண்டும். இதனை உபதேச உந்தியாரில், 'வினையின் விளைவு விளிவுற்று வித்தாய் வினைக்கடல் வீழ்த்திடும், வீடு தரல் இல்லை', என்று பகவான் அறிவுறுத்துகிறார்.*

*அடுத்து அடர்த்து அலரும் உட்பகை என்ன என்று பார்ப்போம். ஆறு வகையான உட்பகை என்பது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் எனப்படும். இவை மனிதர்களின் மனதிற்குள் இருக்கும் தீய குணங்களாகும். இவற்றைப் பற்றி விரிவாகப் பார்க்கலாம்:*

*1. காமம்: இது ஒருவரது பேராசையையும், புலன் இன்பங்களுக்கான தீவிரமான ஏக்கத்தையும் குறிக்கிறது.*

*2. குரோதம்: இது கோபத்தையும், வெறுப்பையும் குறிக்கிறது.*

*3. லோபம்: இது பேராசையையும், பொருள் மீதுள்ள அதீத பற்றையும் குறிக்கிறது. மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வதை தடுக்கும்.*

4. மோகம்: இது மயக்கத்தையும், மாயத் தோற்றத் தையும் குறிக்கிறது.

5. மதம்: இது கர்வம் மற்றும் அகந்தையை குறிக்கிறது.

6. மாச்சர்யம்: இது பொறாமையையும், அடுத்தவர் மீது வெறுப்பையும் குறிக்கிறது.

வெளிப்பகை என்பது வெளியே தோன்றும் அனைத்து விகாரங்கள். வெளித்தோற்ற விகாரங்கள் அனைத்தும் நமது உள்ளே உள்ளவை. நமது உட்பகை வெல்லப்பட்டால், வெளியிலும் பகை காணாது. ஆதலால்தான் ஆன்மீகத்தில் உட்பகை முதலில் அழிதல் வேண்டும் எனப்படுகிறது. இந்த உட்பகை நம்முள் செறிவுற்று உள்ளது. அருணாசல அக்ஷரமணமாலையில் ‘சிலந்திபோல் கட்டி சிறையிட்டு உண்டனை’ என்பது போல் முற்றிலும் வேரோடு அகந்தை நீக்கப்படுதல் இங்கு அறிவுறுத்தப்படுகிறது. வல்வினை மற்றும் உட்பகை இரண்டையும் அகந்தை என்ற ஒரே வார்த்தையால் குறிப்பிடலாம். அகந்தை அழிக்கப்பட்டால் தான் ஆன்மா விளங்கும். அகந்தையை அழித்தோனாகிய ரமணன் திருவடிகள் வெல்க.

ஆணவராகத்தோடு அருவருப்பும் தானகன்று
பூணவராம் மெய்யிற் புனைந்தோன் அடிவெல்க 130

**பதவுரை:**

ஆணவ ராகம் – இதன் பொருள், ஒருவரின் செயல்களில் அல்லது மனநிலையில் வெளிப்படும் கர்வம் அல்லது அகங்காரத்தை குறிக்கும் ஒரு உருவகம். ‘அகங்கார ஓசை’ என்றும் நூலின் வேறொரு இடத்தில் மொழியப்படுகிறது

அருவருப்பு – மிகுதியான வெறுப்பு. இது ஒருவரின் மனதிற்கு மிகவும் வெறுப்பாக, அசிங்கமாக அல்லது கேவலமாக தோன்றுவதைக் குறிக்கிறது.

உதாரணமாக, ஒரு அழுக்கான, துர்நாற்றம் வீசும் இடம் அருவருப்பாக இருக்கிறது என்று கூறுவோம். அல்லது, ஒரு மோசமான செயல் அருவருப்பான செயல் என்று கூறுவோம்.

**பூணவராம்** – ‘பூண்; என்றால் தமிழில் அணிகலன் அல்லது அணிதல் என்று பொருள். இது ஒரு பொருள் அல்லது ஒரு செயலைக் குறிக்கும். பொதுவாக, உடலில் அணியும் ஆபரணங்களைக் குறிக்கப் பயன் படுகிறது. மேலும், ஒரு செயலை, குறிப்பாக அணிதல் அல்லது தரித்தல் என்ற செயலைக் குறிக்கவும் பூண் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது

**மெய்யிற் புனைந்தோன்** – மெய் என்றால் உடல், மார்பு மற்றும் ஆன்மா என்பதாகும் புனைதல் என்றால் அணிதல்.

**விரிவான விளக்கம்**

ஆன்மாவை அணிகலன் போல் மூடி மறைத்து இருப்பது ஆணவ மலம். அந்த ஆணவ ஓசை அகன்றால் ஆன்மா வெளிப்படும். ஒரு பாம்பு தன் உடலில் அணிகலன்போல் தழுவி இருந்தால் ஒரு அருவருப்பு உண்டாதல் இயற்கை. சிவபிரான் ஒரு ஆன்மாவாக ஆன்ம மலத்தை அகற்றியவனாகவும், அதனுடன் அருவருப்பும் அகன்றவனாய் ஒரு பாம்பை உடலில் ஆபரணமாக அணிந்தோன் ஆவான்.

சிவன் தன்மேல் பாம்பை ஆடைபோல் தரித்து இருப்பினும், அதில் ஒரு அசிங்கமான உணர்வை நீக்கியவன். மேலாடையின் குணம் ஒட்டவில்லை. ஆன்மனாகிய ஈஸ்வரன்மேல் அஞ்ஞானமாகிய இருள் போர்த்தி இருப்பினும், ஆணவ மலமாக மூடியிருக்கும் பொருள்களின் குணங்கள் கடந்தோன். ஆணவராகத்துடன் அருவருப்பையும் அகற்றியவன் ஈஸ்வரன். அத்தகையவனின் திருவடி வெல்லட்டும்!

(மேலும் தொடரும்)



# பகவானின் அணுக்கத் தொண்டர் டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு

**தமிழில்: மா. முருகேசன்**

*ஸ்ரீ ரமணாஸ்ரமம் வந்து சேர்ந்த முதல் மூன்றாண்டுகளில் கனகம்மாள் பல அற்புதமான நிகழ்வுகளை கண்கூடாய்க் கண்டு, உளமாற உணர்ந்தார். நீண்டகால மூத்த அடியார்களை அறிந்து அறிமுகமாகி, அவர்கள் ஒவ்வொருவரும் பகவான் முன்னிலையில் பல்லாண்டுகளாக அனுபவமாகிய, மெய்சிலிர்க்கவைக்கும் நிகழ்வுகளையும் கேட்டு அறிந்து கொண்டார். மண்டபத்தில் நிகழ்ந்த உரையாடல்களில் நேரடியாய் கலந்துகொள்ளவில்லை என்றாலும் அவ்வுரையாடல்களில் மிளிர்ந்த நுட்பங்களை அதீத கவனத்துடன் தியான மௌனத்தில் தன்னுள் பசுமரத்தாணியாய் பதித்துக்கொண்டார். பகவான் முன்னிலையில் நிகழும் ஒவ்வொன்றையும் தெள்ளத்தெளிவாய் அறிந்துகொள்வது தனது கடமையல்ல என்பதையும், ஒவ்வொருநாளும் தன் உள்ளம் பகவான் அனுபவத்தில் திளைத்திருக்கச் செய்தலே தன் உயிர்மூச்சாகும் என்பதையும் விரைவில் நன்குணர்ந்தார். எண்ணங்களாய் மனம் மலர்வதைவிட பகவான் அனுபவத்தில் ஆழ்ந்திருத்தலே சாலச் சிறந்தது என உணர்ந்தார். மௌனமாய் மௌனத்தில் உள்ளம் திளைப்பதற்கே பகவான் ஆட்கொண்டு ஆற்றுப்படுத்துகின்றார் என்பதை உளமாற உணர்ந்தார்.*

*நுட்பமான தத்துவ உரையாடல்களைத் தவிர்த்தது மட்டுமன்றி, கேள்விகள் எதைச் சார்ந்ததாய் இருந்தாலும்*

*அவற்றை பகவான் தீவிரமாய் எதிர்கொண்டதில்லை. மற்றவற்றை அறிந்துகொள்ள வேண்டும் என்ற நிலையிலிருந்து கனகம்மாள் விடுதலை அடைய, பகவான் மிகவும் உற்றுழி உதவினார். பேச வேண்டும் என்பதற்காக பகவானிடம் ஏதாவதொன்றை கேட்பதில் தனக்கு தயக்கம் உள்ளது சரியானது தான் என்பதை உறுதிபட நம்பினார்; பேச்சொலி, சொற்கள் இல்லாமல் மௌனமே மொழியாய்க் கொண்டு, தான் பகவானோடு உரையாடுவது மிகவும் உயிரோட்டமுள்ளதாயும், ஆற்றல் மிகுந்ததாயும், உள்ளத்தில் என்றும் நிலைத்திருப்பதாயும் இருப்பதையும், அவர் நன்கு அறிந்து கொண்டுள்ளார். இதுவே, தன் வாழ்வின் நெறியாய் உள்ளதை அறிந்துள்ளது மட்டுமல்லாது, பகவான் அருளுகின்ற அருள்மொழிகள் யாவும், அவரது ஆழ்ந்த மௌனத்தில் ஊற்றெடுப்பதாகும். நிகழ்வது எதையும் அவர் தடுத்ததில்லை; மண்டபத்தில் அருளப்படும் அருள் மொழிகளில் தன்னை அனுபவமாக்கி கொண்டதுடன், மௌனமே மொழியாய் அருளப்படுவதற்கும் வாய்மொழி சொற்களுக்குமிடையே உள்ள இடைவெளியையும் உணர்ந்து கொண்டுள்ளார்.*

***கனகம்மாள் மேலும் கூறுகிறார்:***

***புது மண்டபத்தில்:***

> *செப்டம்பர் 1, 1946ல் பொன்விழா நிகழ்வுக்குப் பிறகு, பகவான் பழைய தியான மண்டபம் அருகில் விழாவிற்காக கட்டப்பட்டு, கூரையால் வேயப்பட்ட விழா மண்டபத்தில் அமர்ந்து, பகவான் அதிக நேரம் அருள் பாலித்தார். அதேசமயம், புதிய மண்டப கட்டுமானமும் நடைபெற்றது. கட்டுமானம் நிறைவுற்று மார்ச் 17, 1949ல் புதிய மண்டப புகுவிழாவும் நடைபெற்றன. புதிய மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள கல்லாலான சோபா பகவானின் புது இல்லமாகியது;*

அதில் அமர்ந்துதான், பகவான் அடியார்களுக்கு அருள்பாலித்து வந்தார்.

பகவானின் சோபா, கருங்கல்லாய் பரிணமிக்கும் சாம்பல் நிறத்துடன்கூடிய ஒரேகல்லில் செதுக்கி, மெருகூட்டப்பட்டு வடிவமைக்கப்பட்டிருந்தது. மிகக் கடினமாய் இருப்பது எதுவானாலும் அதை கல் போன்றுள்ளது எனக் கூறுவோம். ஆனால், இந்த கடினமான கல்லோ பகவானின் பேரரசு பரிபாலனம் நிகழ்வதற்கு, பகவானுக்கு கவின்மிகு சிம்மாசனமாய் திகழ, செதுக்கி வடிவமைக்க அனுமதித்தது. மிகவும் சிக்கலான வேலைப்பாடுகளுடன் சிம்மாசனம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பகவான் அந்த அழகிய சோபாவில் சாய்ந்து ஒருக்களித்து அமர்ந்திருந்தார். சோபாவின் அருகில் இருமருங்கிலும் தொண்டர்கள் அமர்ந்து தியானிப்பதற்கு போதிய இடவசதி இருந்தது. மண்டபத்தின் கிழக்குப் பகுதியில் ஆண்களும், மேற்குப் பகுதியில் பெண்களும் அமர்ந்திருந்தனர். சோபாவின் முன்னால் உள்ள இடத்திலும் அடியார்கள் அமர்ந்திருந்தனர். சோபாவின் இருமருங்கிலும் முன் பகுதியிலும் அமர்ந்திருப்பவர்களும் பகவானின், உள்ளம் கொள்ளை கொள் தெய்வீகத் திருஉருவை கண்ணாறக் கண்டு உள்ளத்தில் நிலைநிறுத்திக்கொள்ள இத்தகைய ஏற்பாடுகள் வசதியாய் இருந்தன.

எவ்வாறாயினும், ஒருவர் எங்கு அமர்ந்திருந்தாலும், பகவானின் கருணைமிகு அருட்பார்வை ஒவ்வொருவரின்மீதும் நிலைகொள்ளும். வழக்கமாக நான் மண்டபத்தின் தென்பகுதியில் ஜன்னலின் அருகில் பகவானை தரிசிக்கும் வண்ணம் அமர்ந்திருந்தேன். போஸ் காம்பவுண்டில் வசிக்கும் வங்காளப் பெண்மணி ராணி மஜும்தார் அனுதினமும் என்னருகில் அமர்ந்திருந்தார். (சோஃபாவில் பகவான் அமர்ந்து தலை சாய்த்து பதியும் பகுதியில் வைத்தியநாத ஸ்தபதியால் செதுக்கி வடிவமைக்கப்பட்டுள்ள ஓங்காரமான ஓம் ஆஸ்ரம முத்திரை சின்னமாக அமையப்பெற்றது).



அடியார்கள் பகவானிடம் எவ்வித தயக்கமுமின்றி உரையாடினர். உரையாடலின்போது பகவானின் உடல் மொழியும், கவர்ந்திழுக்கும் கருணைமிகு கண்ணோக்கும் எங்களை கொள்ளை கொண்டன. பகவான் ஒருபொழுதும் யாரொருவரையும் தன் சீடரென ஏற்றுக்கொண்டதில்லை. ஆன்மீக சொற்பொழிவுகள் ஆற்றியதுமில்லை. அவரது அருந்தவ வாழ்வே அவரது அருள்மொழியாகும்; அதுவே அவரது உபதேசமும் ஆகும். யதார்த்தமான ஒரு சிறுகுறிப்புகூட பொருள் நிறைந்ததாய் திகழ்ந்தது; பகவானின் ஒவ்வொரு பார்வையும் சொல்லும், உடல்மொழியும் ஒரு உண்மையான ஆன்மீக சாதகனுக்கு ஒப்புயர்வில்லா உன்னத உபதேசத்தை அருள்கின்றது. *(Cherished Memories, P.63)*

*மண்டபத்தில் அமைதியாய் அமர்ந்து, தியானத்தில் மூழ்கி, அதில் ஆழ்ந்து அவ்வப்போது கண்திறந்து பகவானை கண்ணாறக் கண்டு, உள்ளம் உவப்ப தன்னுள் நிலைநிறுத்திக் கொள்வதிலேயே கனகம்மாள் மன நிறைவு எய்தினார். குருவை அடியார்கள் தரிசிப்பதை கண்டும் அவர்களிடையே நிகழும் உரையாடல்களை கேட்டும் பக்குவமாகி வந்தார்; சிறிதுகாலம் மட்டும் ஆஸ்ரமத்தில் தங்கி, பகவான் தரிசன தியானத்தில் ஈடுபடும் தொண்டர்களையும் அறிந்துகொண்டார்.*

*ஒருசமயம் ஆன்மீக ஆர்வலர் ஒருவர், பகவானைப் பணிவோடு தரிசித்து சாஸ்டாங்கமாக நமஸ்கரித்து விண்ணப்பித்துக் கொண்டார். தொடர்ந்து தியானத்தில் ஈடுபட்டு, தன்னுள் ஒன்றி ஒடுங்குவதாலேயே ஒருவர் தன்னை உணர்ந்துகொள்ள முடியுமென பகவான் கூறுகின்றார். என்னைப் போன்று அலுவலக பொறுப்புச் சுமைகளாலும் குடும்ப பராமரிப்பு வேலைகளாலும் அல்லலுறும் ஒருவர் இதை எவ்வாறு செய்ய இயலும்? வாழ்வில் பெரும்பாலான நேரத்தை இதைப் போன்ற செயல்களில் செலவிடும்பொழுது, நான் யார்? எனும் ஆத்ம விசாரத்தில் ஈடுபடவும் இடையறா தியானத்தை தொடர்வதற்கும் நேரம் எங்குள்ளது? இவ்வித இக்கட்டிலிருந்து வெளிவருவதற்கு வழிதான் என்ன? பகவான் தெளிவுபடுத்தி நல்வழிகாட்டி ஆற்றுப்படுத்தி ஆட்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.*

*கருணைமிகு கண்களால் அவரை நோக்கி பகவான் அருள்மொழி பகன்றார், ஆஸ்ரமத்திற்கு வர வேண்டுமென்ற எண்ணத்துடன் நீங்கள் வீட்டைவிட்டு புறப்படுகின்றீர் என வைத்துக் கொள்வோம்; வரும் வழியில் உங்கள் நண்பரை சந்திக்கின்றீர்; அவரை முகமன் கூறி வாழ்த்தி வரவேற்று, நலம் விசாரித்த பின், நீங்கள் விடைபெற்று ஆஸ்ரமத்திற்கும் உங்கள் நண்பர் அவர் வழியிலும் பிரிந்து செல்கின்றீர். இப்பொழுது நீங்கள் உங்கள் நண்பரோடு செல்லவில்லை. தொடர்ந்து ஆஸ்ரமம் நோக்கி பயணிக்கின்றீர், இல்லையா?*

*ஆஸ்ரமத்திற்கு வரவேண்டுமென்கின்ற எண்ணம் மிக ஆழமாகப் பதிந்து, வழியில் யாரை சந்திக்க நேர்ந்தாலும் அவரோடு உரிய முறையில் பேசிவிட்டு, பிறகு பிரிந்து உங்களுடைய உண்மையான அடிப்படை எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக பயணிக்கின்றீர். ஆஸ்ரமம் வரவேண்டுமென்ற ஆர்வம் அவ்வளவு ஆழமாய் மனதில் பதிந்துள்ளது. அதைப்போன்று, மனம் தியானத்தில் ஆழ்ந்து ஈடுபட்டிருக்குமானால், எதை செய்ய வேண்டுமோ அதை செய்த பின் மனம் மீண்டும் தியானத்திற்கே திரும்பி வந்துவிடும்.*

*ஒரு வேலையை தொடங்குவதற்கு முன்பும், வேலையை முடித்த பின்பும், ஏன் வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுதும் கூட, மனதை தியானத்தின் பக்கமே நிலை நிறுத்தி இருந்தால், மனம் உள்ளத்தில் எப்பொழுதும் ஒடுங்கி இருக்கும் இயல்பினை கைவரப் பெற்று விடும் செயலிலேயே நிலைநின்றுவிடும். காலப்போக்கில், இதுவே, இயல்பாய்மாறி, வழக்கமாய் அனிச்சை செயலாகி இயற்கையில் அமைந்ததாய் உருப்பெற்றுவிடும்; அதன்பிறகு, இடையறாது தியானத்தில் ஆழ்ந்திருக்கும் தன்மை இல்லையே என உணர மாட்டோம் (Encounters With Bhagavan, Part 11, The Mountain Path July 2006, pp.31–32).*

*பகவான் சோபாவில் கால்களை நீட்டி அமர்ந்திருக்கும் பொழுது, பகவானின் பாத கமலங்களின்கீழ் அமர்ந்திருக்கும் தனிச்சிறப்பு தங்களுக்கு கிடைத்ததாய் சிலர் உணர்ந்தனர். புது மண்டபத்திலிருந்து வெளியில் செல்ல பகவான் பயன்படுத்தும் சிறிய கதவின் அருகில், சில சமயம் கனகம்மாள் அமர்வது வழக்கம். ஒருநாள் காலையில், வழக்கமான இந்த இடத்தில் கனகம்மாள் அமர்ந்து தியானத்தில் மூழ்கிவிட்டார்.*

*பகவான் முன்னிலையில் அமர்ந்து கண்களை மூடி பகவான் தரிசனத்தில் ஆழ்ந்துவிட்டேன்; அன்றைய தபால்களோடு மௌனி அங்கு வந்ததை நான் அறியவில்லை. தபால்களை பார்த்தபிறகு, வழக்கம்போல் கோசாலை செல்வதற்கு*

*பகவான் எழுந்தார்; என்னைத் தவிர, எல்லோரும் எழுந்து பகவான் செல்வதற்கு வழி விட்டனர். என்னைச் சுற்றி என்ன நிகழ்கின்றது என அறிய முடியாத அளவிற்கு நான் தியானத்தில் மூழ்கிவிட்டிருந்தேன். பகவான் செல்லும் வழியிலேயே நான் தொடர்ந்து அமர்ந்திருந்தேன். வெகு அருகில் பகவான் வந்தவுடன் ஒரு பக்தை என் தோள்களில் தட்டி, என் காதில் முணுமுணுத்தார், எழுந்திரு, சீக்கிரம் எழுந்திரு, பகவான் வெளியில் செல்ல வேண்டும்; அவர் வழியை மறைத்து அமர்ந்திருக்கின்றாய். திடுக்கிட்டு நான் கண்களைத் திறந்தேன். நீண்ட நேரம் அமர்ந்திருந்தபடியால், கால்கள் மறத்துப்போய் இருந்தன. எனவே, என்னால் உடனடியாக எழுந்திருக்க முடியவில்லை. எப்படியோ நான் எழுந்து சுவற்றருகில் சென்று சாய்ந்து நின்றேன்.*

*இவற்றையெல்லாம் பகவான் பார்த்துக் கொண்டிருந்தார்; நான் அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்குமாறு கூறிய ஒரு பெண்மணியைக் கண்டு பகவான் எரிச்சலுற்றார். அப்பெண்மணியை அவர் தெலுங்கில் கடிந்து கொண்டார், அவரை தொந்தரவு செய்வதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? இங்கு எவ்வளவோ இடம் உள்ளது. அவரை நீங்கள் எழுந்திருக்கச் செய்திருக்க வேண்டியதில்லை. பகவான் மீது கொண்டுள்ள பக்தி என்றால் மற்றவர்களை தொந்தரவு செய்வது என்பது தான் பொருளா?*

*பகவான் கண்டித்ததற்கும் என்னை பொறுப்பாக்கினார், அந்த பெண்மணி; அவர் கோபமடைந்து தனியாக என்மீது வெறுப்பை உமிழ்ந்தார், கவனத்தை ஈர்ப்பதற்காக சிலர் தியானத்தில் மூழ்கியுள்ளதாய் பாசாங்கு செய்கின்றனர். பகவான் அங்கு வருவதை நான் அறிந்திருக்கவில்லை என எடுத்துரைத்து அவரை சமாதானப்படுத்த என்னால் முடிந்த அளவு முழுமுயற்சி எடுத்தேன்; ஆனால், அப்பெண்மணி மிகப் பிடிவாதமாய் இருந்தார். அப்பெண்மணியின் மனப்பாங்கினால் நான் மிகவும் அதிர்ச்சியுற்றேன்; ஆனால், என்னால் வேறெதையும் செய்ய முடியவில்லை. அந் நேரத்திலிருந்து நான் அந்த குறிப்பிட்ட இடத்தில்*

*அமர்வதில்லை. அதற்குப்பின், பகவான் அந்த வாசலை ஒருபொழுதும் பயன்படுத்தவில்லை என்பதை வருத்தத்துடன் கூறுகின்றேன்.*

*அந்த நிகழ்வுக்குப் பின், பகவான் கிழக்கு வாசலை பயன்படுத்தத் தொடங்கினார். இந்த பக்கம் உள்ள வாயிற் படிகள் சற்று உயரமாக இருந்தன; அதனால் பகவான் கடந்து செல்வதற்கு எளிதாக இருக்க வேண்டுமென்பதற்காக தடித்த கயிற்றாலான படிமிதி கிடத்தப்பட்டது. இந்த வாசலை பகவான் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு முறையும் குற்ற உணர்வு என்னை வாட்டி வதைத்துவிடும். நடந்த நிகழ்வுக்கு நான் வருந்துகின்றேன், பகவான், இத்தகைய இன்னலை தந்தமைக்கு தயைகூர்ந்து என்னை மன்னித்துவிடுங்கள்; சிறிய வாசலை தயைகூர்ந்து மீண்டும் பயன்படுத்தத் தொடங்குங்கள் என்று மனமுருகி வேண்டினாலும் இவற்றை பகவானிடம் விண்ணப்பம் செய்வதற்கு எனக்கு ஒரு பொழுதும் தைரியம் வரவில்லை. பகவானைப் பார்த்தவுடன் நான் சொல்லிழந்து விடுகின்றேன்; பேச்சும் எழவில்லை. இதைப் பற்றி பகவானிடம் பேசுவதற்கு மற்ற அடியார்களும் தயங்கினர். கடைசி வரை அந்த சிறிய வாசலை, மீண்டும் பகவான் பயன்படுத்தவே இல்லை ('Cherished Memories', p.73)*

*(நன்றி சரணாகதி)*

(தொடரும்)

# ஆதிசங்கரரின் பக்தி -வேதாந்தம்

## டாக்டர் ஏ. வி. ராஜகோபாலன்

### அத்தியாயம் - 3

ஆதிசங்கரரின் நூல்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். முதல் வகை, பக்தியைப் பிரதானமாகக் கொண்டவை. அடுத்தது, பக்தி மூலமாக வேதாந்த மார்க்கம் பற்றி விளக்குபவை. மூன்றாவது, முழுவதும் வேதாந்த பரமானவை. இவற்றுள் பக்தியைப் பிரதானமாகக் கொண்ட சுப்ரமணிய புஜங்கத்தில், திருச்செந்தூர் முருகனின் வர்ணனை, மஹாத்மியம் இவற்றைப் பார்த்தோம். இரண்டாம் பகுதியில் நம்மைச் சிந்திக்க வைக்கும் ஆத்யாத்மிக விஷயங்களை விளக்குகிறார் பகவத்பாதர்.

சம்சாரியின் வாழ்க்கை, துக்கம், கவலை, பயம் மற்றும் தீய சிந்தனைகள் போன்ற எதிர்மறை நிலைபாடுகளிலேயே பெரும்பாலும் கழிகின்றது. இதை ஒரு எண்ணிக்கைக் கணக்கோடு விளக்குகிறார் தொண்டரடிப்பொடி ஆழ்வார் 'திருமாலை' என்னும் நூலில்.

“வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவ ரேலும்,
பாதியு முறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு,
பேதைபாலகனதாகும் பிணி பசி மூப்புத் துன்பம்,
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே”
(திவ்யப்பிரபந்தம் 874)

நூறு ஆண்டுகள் நம் வாழ்வு என்று கொண்டால் அதில் பாதி உறக்கத்தில் போகும்; அறியாப் பருவத்தில் 15 ஆண்டுகளும், எஞ்சியவை பசி, நோய் என்று கழிந்து,

இறுதியில் மூப்பு வரும்போது எந்த இறை சிந்தனையும் இல்லாமல் கழியும். நாம் எப்பொழுது இறைவனைப் பற்றி சிந்திப்போம் என்று நொந்து கொள்கிறார்.

இதையே பகவத்பாதர் 'ந்ருணாம் அந்த்யஜானாம்' என்ற சொல்மூலம் வீணாகிப் போன ஒரு சாதாரணனாக நம்மைக் கண்டுகொண்டு அத்தகைய வியக்தியைக் காக்கும் திறன் முருகனுக்கே உண்டு என்று விளக்குகிறார்.

நான் எங்கு போவேன், என்ன செய்வேன்?

அது மட்டுமல்ல. பக்தனுக்கே உள்ள உரிமையோடு, நான் இப்படி இருப்பதற்குக் காரணம் முருகனே என்றும் கூறுவார். "பிரம்மாண்டங்களையெல்லாம் ஆண்ட சூரன், தாரகன் போன்றவர்களையெல்லாம் நீ வதம் செய்தாய். நான் மிகச் சிறியவன்; என்னுடைய இருதய குகை அதனினும் மிகவும் நுண்ணியமானது. அதில் இருக்கும் மனக்கவலை என்னும் மிகச் சிறிய அரக்கனை, மிகப் பெரியோனாகிய உன்னால் அழிக்க முடியவில்லை என்றால் நான் என்ன செய்வேன் (கிம் கரோமி?) எங்கு போய் முறையிடுவேன் (க்வ யாமி?)"

"மமாந்தர்ஹ்ரிதிஸ்தம் மன; க்லேசமேகம்
ந ஹம்சி ப்ரபோ கிம் கரோமி க்வ யாமி" (புஜங்கம்.23)

இது ஒரு விதமான நிந்தாஸ்துதி. நீ எதையெதையோ சாதித்தாயே, இந்த சிறிய விஷயத்தை ஏன் செய்ய இயலவில்லை, என்பது பக்தி மார்க்கத்தில் ஆளப்படும் யுக்தி.

இதை ரமணரின் நோக்கில் பார்க்கலாம். ஒரு பக்தன் எல்லா விதங்களிலும் ஆண்டவனை வணங்குகிறான். அவன் அருளைப் பெறக் கெஞ்சிக் கூத்தாடுகிறான். ஆனால் அந்த ஆண்டவனோ அதைச் சிறிதுகூட செவி சாய்த்துக் கேட்பதில்லை. மற்றவர்களுக்கெல்லாம் தன் கருணையை வாரி வழங்குகிறான். அவர்கள் கேட்காமலே அளிக்கிறான். இது அவன் வஞ்சகத்தனம்,

பாரபக்ஷம் என்றே தோன்றுகிறது. ‘அருணாசலத்தே உறையும் ஈசனே, நீ செய்வது சரியில்லை. இந்த ஒருதலை விளையாட்டை நிறுத்து. எனக்கு அபயம் கொடு; அருள் புரி’

“கெஞ்சியும் வஞ்சியாய்க் கொஞ்சமும் இரங்கிலை
அஞ்சல் என்றே அருள் அருணாசலா”

அக்ஷரமணமாலை 21

இவ்வாறு மனத்தை அலை பாய விடுகிறான் அவன். இது நமக்குத் துன்பம் அளிக்கிறது. கவலையைத் தருகிறது. நிம்மதியை அழிக்கிறது.

இதை எப்படி ஒழிப்பது? அதை ஆராயும்முன் இந்த மனக்கவலை எத்தகையது என்று பார்ப்போம்.

மகாபாரதத்தில் ‘யக்ஷப்ரஸ்னம்’ என்று ஒரு பகுதி. இது ஒரு யக்ஷனுக்கும் தருமபுத்திரனுக்கும் இடையே நடக்கும் உரையாடல் என்னும் முறையில் அமைந்துள்ளது. இதில் கேள்வி–பதில் வடிவத்தில் சராசரி மனிதர்களுக்கான பல பிரச்சினைகள் விளக்கப் படுகின்றன. ஒரு மாணவனின் வேதாந்தப் பயணத்தின் ஆரம்பமாக இது பார்க்கப்படுகிறது. இதில் யக்ஷன் கேட்கிறான், ‘புல்லினும் அற்பமானது எது?’ தருமனின் பதில் நம்மை சிந்திக்க வைக்கிறது. ‘கவலை’ என விடையளிக்கிறான்.

ஏன் கவலை அற்பமானது?

உலகில் நடக்கும் அத்தனை செயல்களும் தாற்காலிகமானது என்று நாம் உணர்கிறோம். இதையே வேதாந்தம் ‘மாயை’ என்கிறது. அந்த அளவுக்கு நம்மால் உணர்ந்து கொள்ள முடியாவிட்டாலும் இந்த உலகியில் விஷயங்கள் நிரந்தரமும் அல்ல; நிம்மதி தருவதும் இல்லை என்பதை அநுபவத்தின் வாயிலாக உள்வாங்க முடிகிறது. இது அனைவருக்கும் எக்காலத்திலும் பொருந்தும். இதைக் கண்ணன்,

*‘அநித்யம் அசுகம்’ என்று கீதையில் சொல்வான். இந்த நிலையில் ‘எதிர்காலத்தில் எது நடக்குமோ?’ என்னும் அச்சமே கவலைக்குக் காரணம். நினைப்பது நடக்காமல் போய்விடுமோ, கிடைத்தது நிலைக்காமல் போய்விடுமோ, நடக்கக்கூடாது நடந்து விடுமோ என்னும் மூன்றும், கவலை மற்றும் அதன் உடன் பிறப்பான பயத்திற்குக் காரணம்.*

*பந்த பாசம்*

*இதற்கு அடிப்படை நம்முடைய பந்தங்கள் எனப்படும் கட்டுகள், மற்றும் அதன் காரணமாக விளையும் பாசம். அது சொத்து, குடும்பம், புகழ், உணர்ச்சிகள் (ஈகோ) எனப் பல கிளைகளாக நம்மை ஆக்ரமிக்கிறது. இந்தக் கவலை, பயம், கோபம் மற்றும் பொறாமை என்னும் குணங்களின் கூடாநட்புதான் நம்முடைய நிம்மதியைக் குலைக்கும் எதிரிகளின் கூடாரம்.*

*இங்குதான் ‘நான்’ என்னும் அகங்காரம் மற்றும் ‘எனது’ என்னும் மமகாரம் பற்றிப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.*

*இந்த நான்–எனது என்னும் பெற்றோர்கள் ‘ஷட் ரிபு’ என வழங்கும் ஆறு வித எதிரிகளை (காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாற்சர்யம்) பெற்றெடுக்கிறார்கள். இந்த சங்கிலித் தொடர்தான் கலியின் வெளிப்பாடு. தாமச–ரஜோ குணங்களின் வெறியாட்டம்.*

*பகவத்பாதர் இந்த நிலையில் ஜீவன்கள் அவதிப் படுவதைப் பார்க்கிறார். இந்தக் கிலேசங்களை நீக்குமாறு முறையிடுகிறார். வேதாந்தத்தின் எல்லை நிலையான அத்வைதத்தை இத்தகைய சம்சாரிகளுக்கு போதிப்பது சரியல்ல என்பதை உணர்ந்த மகான், சுலபமான வழியை முதலில் காட்டுகிறார். ‘முழுமுனைப்புடன் இறைவனிடம் பக்தி செய்’*

*என்பதே அவர் சொல்லும் அறிவுரை. "என் கண்களில் உன் உருவமும், காதில் உன் புகழும், வாயில் உன் புண்ணிய சரித்திரமும், கைகளில் உன் கைங்கர்யமும், உடலில் உன் பணிவிடையும், மற்றும் என் எல்லாச் செயல்களிலும் முருகனே, நீயே இருப்பாயாக."*

*"த்ருஸி ஸ்கந்த மூர்த்தி: ஸ்ருதௌ ஸ்கந்த கீர்த்தி:*
*முகே மே பவித்ரம் சதா தத் சரித்ரம்*
*கரே தஸ்ய க்ருத்யம் வபு: தஸ்ய ப்ருத்யம்*
*குஹே சந்து லீனா மமாசேஷ பாவா: ||"*

*(சுப். புஜங்கம் 26)*

*இவ்வாறு நம் அனைத்துச் செயல்களும் இறைவனின் பாற்பட்டு அமைய வேண்டும் என்று பகவத்பாதர் விரும்புகிறார். ஆனால், இது சுலபமான செயல் அல்ல என்று நமக்குத் தெரியும். இறைவனின் முன் அமர்ந்து உளம் உருகிப் பிரார்த்தனை செய்ய விழைகிறோம். ஆனால் இந்தப் பொல்லாத இந்திரியங்கள் படுத்தும் பாடு இருக்கிறதே, அப்பப்பா சொல்ல மாளாது. கைகள் புஷ்பங்களை இயந்திரத்தனமாகப் போடுகின்றன. கண்கள் எங்கோ நடக்கும் செயல்களைப் பார்க்க, எண்ணமோ பல்லாயிரக் கணக்கான மைல்கள் தொலைவு சஞ்சரித்து தன் போக்கில் செல்கிறது. இவ்வாறே காதுகள் இறைவன் புகழையன்றி வேறு எதையெதையோ கேட்கின்றன. நாக்கோ பொய்யையே உரைக்க விழைகிறது. இவ்வாறு எல்லாப் புலன்களும் தன் விருப்பப்பட்ட வழியில் சஞ்சரிக்கின்றன. இதை இறைவன் எவ்வாறு ஏற்றுக் கொள்வான் என்று உள்ளம் ஏங்குகிறது*

*"கையொன்று செய்ய, விழியொன்று நாட கருத்தொன்று எண்ணப்*
*பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும்*
*மெய்யொன்று சாரச் செவி ஒன்று கேட்க விரும்பும் யான் செய்கின்ற*
*பூசை எவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே."*

*இந்தப் பாடல் சராசரி மனிதனின் நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. இதனின்று விடுபட்டுப் புலன்களை அடக்குவதே பக்தி மார்க்கத்துக்கு மட்டுமில்லை, ஞானத்திற்கும் ஒரே வழி. இதை எளிமையாக இந்த கிரந்தித்தில் கூறும் சங்கரர், மற்ற நூல்களில் இன்னும் விவரமாகக் கூறுவார்.*

*இதை ரமண பகவானின் வாக்கில் பார்த்தால் இதன் முழுத் தாக்கமும் புரியும்.*

*“ஐம்புலக் கள்வர் அகத்தினில் புகும்போது*
*அகத்தில் நீ இலையோ அருணாசலா”*

*(அக்ஷரமணிமாலை 11)*

*இந்தப் புலன்கள் என்பவை சரியான திருடர்கள். வீட்டில் இருப்பவர்கள் அசந்திருக்கும் சமயத்தில் உள்ளே புகுந்து விடுவார்கள். இறைச் சக்தி என்னும் காவல்காரன் அவர்களை விரட்டி அடிக்கும் சக்தி படைத்தவன். ஆனால் அவன் இல்லை என்றால், அவர்கள் வேலை சுலபமாகிவிடும். வீட்டில் இருப்பதைக் கொள்ளை அடிக்கத் துவங்கி விடுவார்கள். அவர்கள் எதைக் கொள்ளை அடிக்கிறார்கள்? நம்முடைய உன்னத ஆன்மிக சொத்தையெல்லாம் எடுத்துச் செல்ல முயல்கிறார்கள். வைராக்கியம், அநுஷ்டானம், உள் நோக்கிப் பார்க்கும் திறன், தியானம் செய்யும் ஒருமுகத் தன்மை, பக்தி நெறி... என்று நம் உயர்ந்த உணர்வுகளையெல்லாம் அடித்துச் சென்று விடுவார்கள்.*

*பகவத்பாதர் இந்த நிலை நமக்கு வராதிருக்க செந்தில் ஆண்டவனை வேண்டுகிறார். “நான் மிகச் சிறிய குழந்தை. நீயோ தீனர்களாகிய உலக மாந்தர் அனைவருக்கும் உறுதுணை. ஆகையால் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் செய்யும் அனைத்துக் குற்றங்களையும் பொறுத்துக் கொள்வது போல நீயே என் எல்லா அபராதங்களையும் மன்னித்து அருள் புரி.”*

*"அஹம் ச அதி பால: பவான் லோக தாத:*
*க்ஷமஸ்வாபராதம் சமஸ்தம் மகேச" (சுப். புஜங்கம் 30)*

*மரணம்*

மனிதனின் எல்லாச் செயல்களுக்கும் முடிவு என்று ஒன்று உண்டு. அதுதான் மரணம். அதை ஒரு ஜீவன் எவ்வாறு எதிர் கொள்கிறான் என்பதை இந்த நூல் விளக்குவதைப் போல வேறு யாரும் சொன்னதில்லை என்பது பலரின் கருத்து.

ஆறிஞர்கள் பலர் மரணத்தைப் பற்றி பல அரிய கருத்துகளைச் சொல்லி உள்ளனர். எபிக்யூரஸ் என்னும் அறிஞர், "நான் இருக்கும் வரை மரணம் இல்லை. மரணம் வரும் போது நான் இல்லை" ("If I am then death is not; if Death is, then I am not" – Epicurus) என்பார். அதாவது வாழ்வு வேறு, மரணம் வேறு. எதற்காக அதைக் குறித்து அஞ்ச வேண்டும் என்பது இவர் கேள்வி. ஆனால் இதற்குமாறாக வேறு கருத்துகளும் உள்ளன. சாவு மணி யாருக்காக அடிக்கிறது என்று சிந்திக்காதே. ஒவ்வொரு மரணத்திலும் உன்னில் ஒரு பகுதியை நீ இழக்கிறாய் என அறி. அதாவது மரணம் என்பது ஒரு ஜீவனின் பௌதிக வாழ்வின் நிரந்தர முடிவு. அதிலிருந்து பாடம் கற்றுக்கொள் என்பதே இதன் கருத்து.

இவ்வாறு மரணத்தைப் பற்றி மாறுபட்ட கருத்துகளை நாம் உலக சிந்தனையாளர்களிடம் காண்கிறோம்.

இந்திய தத்துவம், மரணத்தின் பின் வாழ்வு உண்டு என்பதை வலியுருத்துகிறது. அதாவது இந்த உடல் வேறு, ஆன்மா வேறு. ஆதலால் உடல் மீது மிகுந்த பற்று வைக்காதே என்கிறது நம் தத்துவம். ஆகையால் இவ்வுலகப் பற்றை நீக்கி பரத்தை அறிவதுதான் ஒவ்வொரு ஜீவனின் நோக்கமாக இருக்க வேண்டும். வேறு வழியே இல்லை என்று அடித்துச் சொல்கிறது வேதம். (நான்ய; பந்தா வித்யதேயனாய).



ஆனால் இது சுலபமல்ல என்பதையும் நம் முன்னோர்கள் அறிந்து கொண்டிருந்தார்கள். உலகப் பற்று என்பது சுலபமாக நம்மை விடுவதில்லை. அதனால்தான் அதைப் 'பாசவலை' என்கிறோம். மாட்டிக் கொண்டால் வெளியே வருவது கடினம். இதற்குக் கடோபநிஷதம் ஒரு நல்ல காரணத்தைச் சொல்கிறது.

ஆண்டவன், நம்முடைய ஞானகர்மேந்திரியங்களை நம்முடைய உடலுக்கு வெளியே வைத்தான். அதனால் நாம் வெளியில் நடக்கும் செயல்களையே பார்க்கிறோம். உள்ளே பார்க்கும் திறன் நமக்கு இல்லை.

*எளிய விளக்கம்:*

*"பராஞ்சிகானி வ்யத்ருணத் ஸ்வயம்பூ:*
*தஸ்மாத் பரான் பஸ்யந்தி நாந்தராத்மன்" (கடம். 4.1)*

*உலகில் பெரும்பாலான மக்கள் வேதாந்தத்தின் உட்பொருளை அறிந்தவரில்லை. அவர்கள் மேற்படி கடோபனிஷதத்தின் கருத்துப்படியே செயல் படுகின்றனர். அவர்களிடம் ஆத்மா அழிவற்றது என்னும் விளக்கம் எடுபடாது.*

*இதைத்தான் சங்கரர் விளக்குகிறார். சுப்ரமண்ய புஜங்கத்தின் 3 சுலோகங்களில், சீவனின் அந்திம காலத்து நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.*

*சுலோகம் 20: "இறுதிக் காலத்தில் நான் இந்திரியங்கள் ஒடுங்கி, கதி கலங்கி, அசைவற்று, கபம் ஒழுக, உடல் நடுங்க, அநாதனாக இருப்பேன். அப்பொழுது கருணை கூர்ந்து நீ என் முன் வர வேண்டும்."*

*நம்மை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளன இந்த வரிகள்.*

*மரணபயத்தை மனோதத்துவத்தில் தனதோஃபோபியா (Thanatophobia) என்பார்கள். இது மிகப் பெரும்பாலான மக்களுக்கு வரும் நிலை. அடுத்த சுலோகம் இதை இன்னும் விரிவுபடக் கூறும்.*

*சுலோகம்21: மிகுந்த கோபத்துடன், பயங்கரத் தோற்றம் கொண்ட யம கிங்கரர்கள் அந்த சமயத்தில் என்னைப் பார்த்து, 'இவனை வெட்டு, கொளுத்து, சின்னா பின்னம் செய்' என்று மிரட்டுவார்கள்.*

*இந்த நிலையில் என்னுடைய பிரார்த்தனை என்ன? இதை அதே சுலோகத்தின் பிற்பகுதியில் சொல்வார். 'அச்சமயத்தில் நீ சீக்கிரமாக உன் மயில் வாகனத்தில் ஏறிக் கொள், கையில் வேலை ஏந்திக் கொள். 'பயப்படாதே' என்று அபயமளித்து என் முன் விரைவில் வா.'*

*எவ்வளவு இயற்கையாக மரணத்தின் பிடியில் சிக்கி இருக்கும் ஒரு அப்பாவி சீவனின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் அந்த அத்வைத ஜோதி!!*

*சுலோகம் 22: மூன்றாவது சுலோகத்தில், இதையே இன்னமும் விரிவு படுத்திச் சொல்கிறார். இதை நான் இப்பொழுதே சொல்லக் காரணம் என்ன? இறக்கும் தருவாயில் என்னால் பேச முடியாது; முறையிடும் சக்தி எனக்கு இருக்காது. அதனால் இப்பொழுதே பலமுறை உன் திருவடிகளில் விழுந்து வணங்கிக் கேட்கிறேன். அந்தக் கடைசித் தருணத்தில் என்னை உதாசீனம் செய்து விடாதே.*

*இந்த மூன்று சுலோகங்களும் மனதை உருக்கக் கூடியவை. நம் அனைவருக்கும் நிகழக் கூடிய ஒரு நிலையை நமக்கு முன்னதாகவே ஒரு எச்சரிக்கையாக அளிக்கிறார். இதே போன்ற ஒரு கருத்தைப் பெரியாழ்வார் பாசுரத்திலும் பார்க்கலாம்.*

*"எய்ப்பு என்னை வந்து நலியும்போது*
*அங்கு ஏதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்*
*அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்*
*அரங்கத்து அரவணைப் பள்ளியானே."*

*"அப்போதைக்கு இப்போதே சொல்லி வைப்பது" என்பது முக்கியமான செய்தி.*

*இவ்வாறு, இந்த சுப்ரமண்ய புஜங்கம் என்னும் நூலில் ஒரு சாமானியனுக்குத் தேவையான சில முக்கிய நெறிகளை பகவத்பாதர் இறைவனிடம் யாசிக்கும் பாணியில் அமைக்கிறார். இது இரங்கல் என்னும் பக்தி நிலையில் வைத்துப் பாடப்படும் வகையில் உள்ளது. ஆழமான கருத்துகள் உடைய நூல். அழகான மெட்டில் அமைந்த ஆன்மிகப் பொக்கிஷம்.*

# ஸ்ரீ ரமணாஸ்ரமம்
# மஹா கும்பாபிஷேகம்
# 2025

*நிரந்தர அனுக்ரஹ விலாசத்துடன் விளங்கிவரும் ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரர் மற்றும் ஸ்ரீ ரமணேஸ்வர மஹா சந்நிதானங்களின் கும்பாபிஷேகம் எதிர்வரும் ஆகஸ்ட் 20, 2025 அன்று விமரிசையாக நடைபெறவுள்ளது.*

*2013 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்திற்குப் பிறகு, ஆஸ்ரம சந்நிதிகள், விமானங்கள் மற்றும் விக்கிரகங்கள் விரிவான பழுதுபார்ப்பு திருப்பணிகள் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்று வருகின்றன. பகவான் தேகத்துடன் இலங்கியபோது, முதல் கும்பாபிஷேகம் 1949 இல் நடைபெற்றது. திரு. வைத்தியநாத ஸ்தபதி 1949 இல் முதல் கும்பாபிஷேகத்தை நிகழ்த்தினார். அவரது மகன், ராமச்சந்திர ஸ்தபதி, 1995 மற்றும் 2004 கும்பாபிஷேகங்களுக்கான புனரமைப்புப் பணிகளைச் செய்தார். அந்தப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து அன்னாரது பேரன் செல்வநாத ஸ்தபதி, 2013 கும்பாபிஷேகத்தை மேற்பார்வையிட்டார். தற்போது 2025 ல் நடைபெறவுள்ள கும்பாபிஷேக திருப்பணிகளையும் செய்து வருகின்றார்.*

*ஆகஸ்ட் 18 ஆம் தேதி யாகசாலை பூஜைகளில் துவங்கி, ஆகஸ்ட் 20 ஆம் தேதி மஹா கும்பாபிஷேகத்துடன் நிறைவுபெறவுள்ள இந்த மூன்று நாட்கள் வைபவத்திற்கு ரமண அன்பர்கள், ஆன்மிகவாதிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அன்னை அழகம்மை மற்றும் பகவான் ரமண மகரிஷிகளின் பேரருளை பெறுமாறு அன்போடு அழைக்கின்றோம்.*





# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### மஹா பூஜை

*பகவான் ரமண மகரிஷிகளின் அன்னை அழகம்மை சமாதி தினம் மஹா பூஜையாக ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அனுசரிக்கப்படுகின்றது. இவ்வாண்டு 21/5/2025 அன்று ஆச்ரமத்தில் அமைந்துள்ள மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தில் மஹா பூஜை சிறப்பாக நடைபெற்றது.*

*மகனின் திருக்கரத்தால் முக்தியடையும் பேறுபெற்ற அழகம்மையயின் சமாதி ஆலயமான மாத்ருபூதேச்வரர் ஆலயம் பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன.*

### பசு லட்சுமியின் நினைவு நாள்

*7/7/2025 திங்கட்கிழமையன்று பசு லட்சுமியின் ஆராதனை ஆச்ரமத்தில் சிறப்பாக நடைபெற்றது.*

*பசு லட்சுமி உடலால் மிருகமாக இருந்தாலும் பகவானின்மீது கொண்ட அசாதாரண பக்திப் பிரேமையினால் ஆன்மிக முன்னேற்றம் அடைந்து அவரது திருக்கரங்களால் முக்திபெறும் பேறு பெற்றவள். பகவான் அப்பசுவினிடம் காட்டிய கருணையும் வாத்சல்யமும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. வெவ்வேறு ஆண்டுகளில் பகவானின் ஜயந்தி தினம் அன்றே பசு லட்சுமி கன்றுகள் ஈன்றாள்.*

## குருபூர்ணிமா

*ஸ்ரீரமணாச்ரமத்தில், குரு பூர்ணிமாவை முன்னிட்டு 10/7/2025 அன்று பகவான் சந்நிதியில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. ஆச்ரமம் சார்பில் ஆச்ரமத் தலைவர் சந்நியாசிகள் சிலருக்கு வஸ்திரங்களை வழங்கி கௌரவித்து மரியாதை செய்தார்.*

## திருமதி. லட்சுமி வெங்கடராமன்

*திருமதி. லட்சுமி, ஆசிரம முன்னாள் தலைவர் திரு. டி. என். வெங்கடராமன் (சுவாமி ரமணானந்தா) அவர்களின் மூத்த மகள், கடந்த ஜூன் 13, 2025 அன்று ரமண பதம் அடைந்தார்.*




*திருமதி. லட்சுமி 1941 ஜனவரி 17 அன்று பிறந்தார். 1960 பிப்ரவரி 7 அன்று ஸ்ரீ எம். வெங்கடராமனை மணந்தார். திருமணத்திற்குப் பிறகு மதுரையில் வசித்த இவர், 1966 முதல் சென்னையில் குடியேறினார். அருணாசலத்தின்மீது மிகுந்த பக்தி கொண்ட லட்சுமி, அக்ஷரமணமாலை பாராயணம் செய்து, கர்மயோக வாழ்க்கை வாழ்ந்தார். 2018 முதல் மும்பையில் வசித்து வந்தார். 2019 ஆம் ஆண்டு இவரது கணவர் காலமானார். இவர்களுக்கு சுரேஷ் மற்றும் கணேஷ் என இரு மகன்கள் உள்ளனர்.*

*தேவராஜ முதலியாரின் "அனுதினமும் பகவானுடன்" நூலில் இருந்து வரும் இந்தக் கீழ்க்கண்ட உரையாடலின் மூலம் திருமதி. லட்சுமிக்கு பகவானுடன் இருந்த வாழ்நாள் தொடர்பை அறிய முடிகிறது:*

*"நான் (தேவராஜ முதலியார்) சந்நிதிக்குள் நுழைந்தபோது, பகவான் ஐந்து வயது லட்சுமியுடன் பேசிக்கொண்டிருந்தார். லட்சுமியை எருக்கூரில் வளர்க்கும் யோசனை தனக்குப் பிடிக்கவில்லை என நான் பகவானிடம் சொன்னேன். போலந்து குழந்தைகள் கூட ஆசிரமத்தில் வளரும்போது, நம் லட்சுமியை வேறு எங்கோ அனுப்புவது சரியல்ல என்றேன். பகவான் புன்னகைத்து, 'அவள் தாத்தா (பிச்சு ஐயர்) அங்கே இருந்தால் மட்டுமே லட்சுமி எருக்கூரில் இருப்பாள்' என்றார். இதைக் கேட்ட பலராம், சாகுந்தலத்தில் ஒரு மேற்கோளை நினைவு கூர்ந்தார்."*

## திரு. T.S வைத்தியநாதன்

*திரு. T.S வைத்தியநாதன் அவர்கள் 14/05/2025 அன்று காலை 11:30 மணியளவில் காலமானார். 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி பிறந்த தின்னியம் சுப்பிரமணியன் வைத்தியநாதன் அவர்கள், காரக்பூரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (IIT) பட்டம் பெற்றவர். பின்னர், அவர் அமெரிக்கா சென்று இருபது ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு தொழில்முறைப் பணிகளில் ஈடுபட்டார். அருணாசலத்தின் மீதும் ரமண மகரிஷிகளின் மீதும் தாம் கொண்ட தீவிர பக்தியின் காரணமாக, திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்கு அடிக்கடி புனிதப் பயணம் மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நியூயார்க்கில் உள்ள அருணாசல ஆசிரமத்திற்கும் தவறாமல் சென்று வந்தார்.*



*2012ல் இந்தியா திரும்பிய வைத்தியநாதன், ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் நூல் வெளியீட்டுத் துறையின் தலைவராகத் தன்னார்வத் தொண்டு செய்தார். ஆசிரமத்தின் டிஜிட்டல் துறையிலும், குறிப்பாக யூடியூப், முகநூல், இணையவழி புத்தக விற்பனை ஆகியவற்றையும் தொடங்கி மேம்படுத்தி முக்கியப் பங்காற்றினார்.*

*2018 செப்டம்பர் 1 அன்று வெளியான ஏழு தொகுதிகள் கொண்ட "Arunachala Ramana Eternal Ocean of Grace" ஆங்கில நூல் தொகுப்பை வெளியிட்டதில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.*

*பணிவு, பக்தி, தன்னலமற்ற சேவைக்கு உதாரணமான இவர், 2021 செப்டம்பர் 1 வரை ஆசிரமத்திற்குச் சேவை வழங்கினார். ரமண அன்பர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த வைத்தியநாதன், ரமணரின் திருவடிகளில் ஐக்கியமானாலும், அவரது பங்களிப்புகள் என்றென்றும் நினைவுகூரப்படும்.*

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

*Printed and Published by:* A. Kumar Raja,
20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

உ

ஓம் நமோ பகவதே ஶ்ரீ ரமணாய


# மஹா கும்பாபிஷேகப் பத்திரிகை



ஶ்ரீ கணபதி



ஶ்ரீ சுப்ரஹ்மண்யர்



ஶ்ரீ மாத்ருபூதேஸ்வரர்,
ஶ்ரீ ரமணேஸ்வரர்



ஶ்ரீ யோகாம்பிகா



ஶ்ரீ சண்டேஸ்வரர்

*பிள்ளையாப் பெற்றவளைப் பிச்சாண்டி யாக்கியெங்கும்*
*பிள்ளையாப் பேழ்வயிற்றைப் பேணினீர் பிள்ளையான்*
*கன்னெஞ்சோ மாடந்துப் பிள்ளையாரே கண்பாரும்*
*பின்வந்தான் தன்னைநீர் பெற்று.*

*– ஶ்ரீ பகவான்*

*வேதங்களினால் எந்தப் பேரொளி அறிவிக்கப்பட்டதோ, எந்தப் பேரொளி இவ்வுலகம் முழுதும் ஊடுருவி உள்ளதோ, எந்தப் பேரொளி அவள் மைந்தனான குஹரமணனின் கண் பார்வையில் வெளிப்பட்டதோ, அந்தப் பேரொளியாகவே அழகம்மையானாள்.*

*– கணபதி முனி*

*ஞானத்திரளாய் நின்ற பெருமா னல்ல வடியார்மே*
*லூனத்திரளை நீக்கு மதுவு முண்மைப் பொருள்போலு*
*மேனத்திரளோ டினமான் கரடி யிழியு மிரவின்க*
*ணானைத்திரள் வந்தணையுஞ் சார லண்ணா மலையாரே.*

*– ஞானசம்பந்தர்*

*தெளிவில் நீலோற்பல நேயனை நிகர்த்தவனும், ஒளியிற்றாமரை நாயகனும், பிரஹ்ம நிஷ்டையில், ஆலிலின் கீழமர்ந்த அப்பனை நினைவுறுத்துவானும், அலைவற்றவனும் ஆகிய பெருமானை ஸ்மரிக்கிறோம்.*

*– ரமண கீதை அத்.18, பாடல். 13*

அன்புடையீர்,

ஶ்ரீ ரமணாஸ்ரமத்தில் ஶ்ரீ மாத்ருபூதேஸ்வரர் மற்றும் ஶ்ரீ ரமணேஸ்வர மஹா சந்நிதானங்கள் நிரந்தர அனுக்ரஹ விலாசத்துடன் விளங்கி வருகின்றன. ஜாதி, மத, இன பேதங்களைக் கடந்து அனைத்து உயிர்களும் பயன்பெறும் வண்ணம் பகவானது உபதேசங்கள் அமைந்துள்ளது. அவரது வாய்மொழி, மௌனோபதேசத்தையும் தாண்டி, அவரை நினைத்த மாத்திரத்திலேயே காலதேசங்களைக் கடந்து எண்ணற்றோர் பயன்பெற்று வருகின்றனர். இத்தகைய ஞானத்திரளை ஈன்றெடுத்த அன்னை அழகம்மைக்கு தனது திருக்கரத்தால் 1922 ஆம் ஆண்டு முக்தி அளித்தார் பகவான் ரமண மகரிஷிகள். அவ்வன்னையின் அருள் ஒடுக்கத்தின் சந்நிதியாக ஶ்ரீ மாத்ருபூதேஸ்வரர் ஆலயமும் ஶ்ரீ ரமணாஸ்ரமமும் உருவானது. 1950 பகவான் ரமண மகரிஷிகளின் விதேக முக்திக்குப் பிறகு ஶ்ரீ ரமணேஸ்வர மஹாலிங்கமும் ஸ்தாபிக்கப்பட்டது.

ஶ்ரீபகவத் கிருபையால் ஶ்ரீ யோகாம்பாள் சமேத மாத்ருபூதேஸ்வரர் சந்நிதிக்கும் அதை அடுத்துள்ள ஶ்ரீ ரமணேஸ்வர மஹாலிங்க சந்நிதிக்கும் நிகழும் விசுவாவசு வருஷம் ஆவணி மாதம் 4 ஆம் நாள் (20-8-2025) புதன்கிழமை துவாதசி திதி, புனர்பூச நக்ஷத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை உதயாதி நாழிகை 10 நாழிகைக்கு மேல் 12 நாழிகைக்குள் காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் துலா லக்னத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

பக்தர்கள் யாவரும் விழாவில் கலந்து கொண்டு ஆன்மலாபமடையுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

*திருவண்ணாமலை 606 603*
*27.06.2025*

வேங்கட். சு. ரமணன்
*தலைவர்*
*ஶ்ரீ ரமணாஸ்ரமம்*

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

